புனித ராஜ்யம்

(சென்னை எழும்பூர் நிலையத்தில் புகைவண்டி வந்து நிற்கிறது. நிலையத்தில் உள்ள சுமை தூக்கும் தொழிலாளர்கள் ஒவ்வொரு பெட்டியிலும் ஏறி மூட்டை முடிச்சு பெட்டி படுக்கைகளைத் தூக்கிக்கொண்டு பயணிகளுடன் டாக்சி கார்களையோ அல்லது பயணிகளின் சொந்தக் கார்களையோ நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். சுமை தூக்கும் தொழிலாளர்களுக்குரிய உடையுடன் அந்த நிலையத்தில் "பொடியன்" அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருக்கிறான். அவன் கையில் ஒரு உயரமானதும் சதுரமானதுமான பெட்டி இருக்கிறது. அதே புகைவண்டியிலிருந்து சுந்தரம், சுந்தரி (இனி மேல் சொர்ணியை சுந்தரி என்றே அழைப்போம்) வேலன் மூவரும் இறங்குகிறார்கள். ஒவ்வொருவரும் ஆளுக்குக் கொஞ்சம் மூட்டை முடிச்சுக்களைத் தூக்கி கொண்டு இறங்குகின்றனர். பிளாட்பாரத்தில் அந்தச் சாமான்களை வைத்துவிட்டு, சுந்தரம் வேலனைப் பார்த்து)

சுந்தரம்: வேலா! இந்த சாமான்களை யெல்லாம் ஏத்துறமாதிரி பெரிய டாக்சி ஒன்று கிடைக்குதா பாரு!...

வேலன்: இதோ பார்த்துட்டு வர்றேன்...

(வேலன் ஓடுகிறான்)

சுந்தரம்: சுந்தரி, களைப்பா இருக்கும் இந்தப் பெட்டி மேலேயே உட்காரு! ...

சுந்தரி: வேண்டாம் — வேண்டாம் — நீங்க உட்காருங்க...!

சுந்தரம்: நீ சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நான் உட்காரத்தான் போகிறேன்.

(என்று கூறியவாறு சுந்தரம் ஒரு பெட்டியின் மீது உட்காரப் போகிறான். அந்தப் பெட்டியைப் பார்த்ததும் அவனுக்கு ஒரு வியப்பு; தன் வீட்டில் அப்படி ஒரு பெட்டி இருந்ததாக அவனுக்கு நினைவில்லை)

சுந்தரம்: சுந்தரி! இது ஏது இந்தப் பெட்டி புதுசா இருக்கு? நம் வீட்டிலே இப்படி ஒரு பெட்டி இருந்ததாக எனக்கு நினைவில்லையே!

சுந்தரி: அந்த வேலன் ஏதாவது தேடிக் கண்டு பிடிச்சு கொண்டு வந்திருக்கணும்!...

(சுந்தரம் அந்தப் பெட்டி மீது உட்கார்ந்

காட்சி 10

துகொண்டு, தன் சட்டையின் பக்க வாட்டுப் பையிலிருந்து ஒரு சிகரெட் டப்பாவை எடுத்து, ஒரு சிகரெட்டைப் பற்ற வைக்கப் போகிறான். சுந்தரி, அந்த சிகரெட்டை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு)

சுந்தரி: இதெல்லாம் என்ன கெட்ட பழக்கம்?...

சுந்தரம்: ஓ!... அதுக்குள்ளே என்னை அடக்கி ஆளுகிற அதிகாரத்தை நீயே எடுத்துக்கிட்டியா?

சுந்தரி: அதிகாரமல்ல; அன்பு வேண்டுகோள்!

சுந்தரம்: அன்புக் கட்டளையாகவே எடுத்துக் கொள்கிறேன்.

(இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது ஒரு மூலையில் போர்ட்டர் உடை தரித்த பொடியனும், நொண்டியும், அண்ணாச்சியும் ஒதுங்கிநின்று கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். பொடியன் கையில் இப்போது பெட்டி இல்லை. டாக்சிகொண்டு வரப்போன வேலன், சுந்தரத்திடம் ஓடி வந்து)



வேலன்: பெரியடாக்சி ரெடி எஜமான்!

(வேலன் சொல்லிமுடிப்பதற்குள் இரண்டு போலீஸ் அதிகாரிகள், போலீசார் புடை சூழ அந்த இடத்திற்கு வந்து, சுந்தரத்தையும், சுந்தரி — வேலன் ஆகியோரையும் சூழ்ந்து கொள்கிறார்கள்;

சுந்தரம்: என்ன வேண்டும் உங்களுக்கு?

அதிகாரி; நாங்கள் மது விலக்குப் போலீஸ் அதிகாரிகள்! உங்கள் பெட்டி படுக்கைகளை சோதனை போடவேண்டும்.

சுந்தரம்: ஏன்?

அதிகாரி: அன்னிய நாட்டு மதுப் புட்டிகளை நீங்கள் கொண்டுவருவதாக எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது;

சுந்தரம்: நானும் போலீஸ்

(2ம் பக்கம் பார்க்க)

கலைஞர் கருணாநிதி

12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு.கருணாநிதி

"NAM NADU" Official Organ of the D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2009 15—10—1978 | இதழ்-5

இனமொழி காக்கும் இலட்சிய இயக்கம்

பேராசிரியர் க.அன்பழகன்

தந்தை பெரியார் அவர்கள் தேசிய இயக்கத்திலேபாடுபட்ட அந்த நாளிலேயும், தேசிய இயக்கத்திலேஒருவகுப்பாருடைய ஆதிக்கம் தவிர்க்க முடியாததாய் இருக்கிறது என்பதைக் கண்டு அதற்கு, பல்வேறு மாநாடுகளிலே எதிர்ப்பு தெரிவித்தும் அவர்களுடைய கருத்து அங்கே ஏற்கப்படாத நிலையில் 1925—ம் ஆண்டில்காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் இருந்து, அவர் வெளியேறி வந்து பின்னர் இந்த நாட்டு மக்களிடத்திலே தன்மான உணர்வை ஏற்படுத்தினால்தான் இந்தத் தமிழர் இனம் தலையெடுக்கும் என்ற எண்ணத்தோடு சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கி, அதற்குப் பிறகு தமிழ்நாட்டிலே இந்தி புகுவது தமிழுக்கு ஆபத்து, தமிழனுக்கு ஆபத்து தென்னாட்டு மக்களுக்கு ஆபத்து என்று தீர்மானித்து, அந்தப் போராட்டத்திலே ஈடுபட்டு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நடத்திய காலத்திலேயே (1938 ல்) நீதிக் கட்சியினுடைய தலைவராகவும் தந்தை பெரியார் அவர்கள் ஒருமனதாக ஏற்கப்பட்ட காலத்திலே, அதைத் தொடர்ந்து நீதிக் கட்சியே திராவிடர் இயக்கமாக 1944—ம் ஆண்டிலே தந்தை பெரியார் அவர்களுடைய, அண்ணாஅவர்களுடைய உணர்வின் உருவமாக வடிவெடுத்த அந்த நாளிலும், அதற்குப் பிறகு பல ஆண்டுகாலம் அவர்கள் தொண்டு ஆற்றிய காலத்திலும், எந்த நேரத்திலும் தந்தை பெரியார் அவர்களோ, அண்ணா அவர்களோபதவியை எதிர்பார்த்துச் செயலாற்றியதில்லை என்பதையும் அந்த காரணத்தால் அவர்களுடைய இலட்சியத்திலே என்றைக்கும் சோடை போனதில்லை என்பதையும் உணர்ந்து கொண்டாடுகிற நாங்கள் பதவிகளை எண்ணி எங்களுடைய இலட்சியத்தை அமைத்துக்கொள்ளவில்லை என்பதையும் இன்றுள்ள ஆட்சியாளர்களுக்கு மட்டுமல்ல நாட்டு மக்களுக்கும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தந்தை பெரியாரைப் பின்பற்றி அவருடைய சுயமரியாதைக் கனல் நாட்டிலே பரவினால்தான் பழமை வேகம் மடியும், தமிழ் மக்கள் விழிப்புணர்ச்சியும்,எழுச்சியும்கொள்வார்கள் என்பதை உணர்ந்து அந்த உணர்வை உண்டாக்கிய ஒரே தலைவர் என்னுடைய வாழ்நாளிலே நான் கண்டவரும் ஏற்றவருமான ஒரேதலைவர் தந்தை பெரியார்அவர்கள் தான் என்று அறிவித்து, அண்ணா அவர்கள் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக வருகிற அளவுக்குஅரசியலையே மாற்றி அமைத்தார்கள்என்று சொன்னாலும், மாபெரும் செல்வாக்கைப் பெற்றுக் காங்கிரஸ் கட்சியை இறக்கிக் காட்டினார்கள் என்று சொன்னாலும் முதலமைச்சர் பதவிக்காக இந்தக் கட்சி நடத்தவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்களுடைய பாதையிலே வருகிற டாக்டர் கலைஞர் அவர்கள் இன்றைக்குப் பதவிக்காக அரசியல் நடத்தவில்லை என்பது வேறு யாருக்குப் புரிந்தாலும், புரியாவிட்டாலும் இன்றைக்கு இருக்கிற தமிழக முதல்வர் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக நான் நினைவூட்டுகிறேன். பதவிகள் வரும்; போகும் என்பதுகூட அல்ல. இந்தப் பதவிகள் தமிழ் இனத்தைக் காப்பதற்கு ஒரு கருவியாக இருக்க வேண்டுமேயொழிய, தமிழ் இனத்தை அழிப்பதற்கு இந்தப் பதவிகள் பயன்படக் கூடாது என்பதற்காக, அந்த பதவிகள் எதிரிகளுடையகருவிகளாக இருக்கக்கூடாது என்பதற்காக, அந்தப் பதவியிலே இருப்பவர்கள் இன எதிரிகளாக தங்களை ஆக்கிக்கொள்ளக்கூடாது என்பதற்காக இன்னும் கூடச் சொன்னால் தமிழ் இனத்தை அழிப்பவர்கள், இன உணர்வை மங்கச் செய்பவர்கள்,மொழிப்பற்றை மழுங்கச் செய்பவர்கள் இருக்கிறார்களே என்ற அந்த வகையிலே திராவிட முன்னேற்றக் கழகம் அந்தப் பதவிகளையும் கருத்திலே கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறதே தவிர, திராவிட முன்னேற்றக் கழகம் பெரியார் காட்டிய பாதையில் அண்ணா அவர்களுடைய உள்ளத்திலே நிலவிய அந்தஉணர்வுகளின் அடிப்படையில், அரசியல் பதவிகளுக்காக இந்தக் கட்சியை நடத்தவில்லை என்பதை நான் நினைவூட்டுகிறேன் ஆனால் அரசியல் பதவிகளுக்காக அல்ல—அதிகாரங்களுக்காக அல்ல என்பதாலேயே அரசியல் நடத்தமாட்டோம் என்று யாரும் கருதவேண்டாம். இந்த நாட்டில் அரசியல் எப்படி நடக்கவேண்டும் என்று தீர்மானிக்கிற ஆற்றல் இந்த நாட்டு மக்களுக்கு ஏற்படுகிற அளவுக்கு நாங்கள் அரசியல் நடத்துவோம். பெரியார் அவர்கள் அப்படித்தான் நடத்தினார்கள்.

அண்ணா அலர்களைக் கூடப் பெரியார் அவர்கள் எதிர்த்தார்கள்! கண்டித்தார்கள். எங்களை எல்லாம் கூட மிகச்

9-ம் பக்கம் பார்க்க

புனித ராஜ்யம்....

(முதற் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரியாக இருந்தவன்தான்! எனக்கு மது அருந்தும் பழக்கமே கிடையாது'

அதிகாரி: பிறகென்ன? பயமில்லாமல் இருக்கலாமே! .. தொந்தரவுக்கு மன்னியுங்கள், எங்கள் கடமையை நாங்கள் செய்யவேண்டியிருக்கிறது!

சுந்தரம்: ஓ! உங்கள் விருப்பம் போல் செய்யுங்கள்!

(சுந்தரம் அலட்சியமாகக் கூறிவிட்டு ஒதுங்கி நிற்கிறான்; போலீசார், பரபரவென்று எல்லாப் பெட்டிகளையும் திறக்க முனைகிறார்கள். சுந்தரி அந்தப் பெட்டிகளுக்குரிய சாவிகளைக் கொடுக்கிறாள். எந்தப் பெட்டியிலும் எதுவும் கிடைக்கவில்லை. மூட்டைகளை அவிழ்த்து துணிமணிகளைச் சிதற விடுகிறார்கள். இறுதியாக சுந்தரம் உட்கார்ந்திருந்த அந்த உயரமான பெட்டிக்குரிய சாவியைக் கேட்கிறார்கள்.)

வேலன்; ஏது இந்தப்பெட்டி? இது நாம் கொண்டு வந்தது இல்லியே!

சுந்தரி: அதான் நாங்களும் சந்தேகப் பட்டோம்!...

சுந்தரம்: இன்ஸ் பெக்டர் சார்!... இது எங்கபெட்டி இல்லை...

அதிகாரி: என்ன சார் நீங்களும் இந்த இலாக்காவிலே எத்தனையோ வருஷமா இருந்திருக்கீங்க; போலீசை ஏமாத்துறதுக்குக் கடத்தல்காரர்கள் கையாளுகிற தந்திரங்கள் தெரியாதா என்ன? இந்தாப்பா! சாவி இல்லேன்னா பரவாயில்லை — பூட்டை உடைச்சு பெட்டியைத் திறந்து பாரு!

(போலீசார், அந்தப் பெட்டியின் பூட்டை உடைக்கிறார்கள்- பெட்டி திறக்கப்படுகிறது. சுந்தரம் சுந்தரி, வேலன் மூவரும் திகைத்துப் போகிறார்கள். பெட்டி நிறைய மதுப் புட்டிகள் இருக்கின்றன.)

அதிகாரி: இல்லாது பிறவாது! அள்ளாது குறையாது! அப்பிடின்னு சும்மாவா சொன்னாங்க... மிஸ்டர் சுந்தரம், இப்போது உங்களைக் கைது செய்திருக்கிறோம்.

வேலன்: அய்யா! இது அக்கிரமம்—அநியாயம்! இந்தப்பெட்டி எங்களுடையதே இல்லை...

சுந்தரி: ஒரு நிரபராதி மேலே பழியைப் போடாதீங்க .. இந்தப் பெட்டிக்கும் எங்களுக்கும் சம்பந்தமே இல்லை...

அதிகாரி: மதுவிலக்குச் சட்டம் தீவிரப்படுத்தப் பட்டிருக்குது அம்மா!... குற்றம் செய்துவிட்டு யாரும் தப்ப முடியாது; தவறு செய்தால் அதுவும் தெரிந்து செய்தால் தேவன் என்றாலும் விட மாட்டோம் ... போனால் போகிறது என்று தாய்க்குலம் என்பதற்காக உங்களை விட்டு விடுகிறோம் — மிஸ்டர் சுந்தரம்' வாங்க போகலாம்.

சுந்தரம்: சுந்தரி! வேலா! பழிவாங்கும் படலம் ஆரம்பமாகி விட்டது. நேர்மையாக நடப்பேன் என்று நான் சொன்னதற்காக மேலிடத்தார் எனக்குத் தருகிற பரிசு இது!

வேலா! நீ சுந்தரியை அழைத்துக் கொண்டு அவுங்க அத்தை வீட்டுக்குப்போ!...என்னை ஜாமீனில் எடுத்து வழக்கு நடத்துவதற்கான ஏற்பாடுகளைக் கவனி! சுந்தரி! கவலைப்படாதே ... சூழ்ச்சி வலையை அறுத்துக்கொண்டு விரைவில் வருகிறேன்.

(சுந்தரியும் வேலனும் கண்ணீர் வழிய நிற்கிறார்கள். சுந்தரத்தைப் போலீசார் அழைத்துக் கொண்டு போகிறார்கள். மதுபானமிருந்த பெட்டியையும் ஒரு போலீஸ்காரர் தூக்கிக் கொண்டு போகிறார். பிளாட்பாரத்தின் மற்றொரு மூலையில் இருந்த அண்ணாச்சி, நொண்டி, பொடியன் மூவரும் மகிழ்ச்சியால் துள்ளுகிறார்கள்.)

அண்ணாச்சி: எப்படி நம்ப திட்டம்? பயல் சரியானபடி மாட்டிக்கிட்டான்.

நொண்டி; ஆமா' இன்னைக்கு சாய்ந்திரமே நம்ப பத்திரிகைகளிலே செய்தியைக் கொடுத்து கொட்டை எழுத்திலே போடச் சொல்லி இவன் மானத்தை வாங்கணும்!... அண்ணாச்சி வாங்க— அந்த சொக்கியையும் வேலனையும்நம்ப பின் தொடருவோம்!....

(காட்சி முடிகிறது)

சட்டம் அவர்கள் கையில்!

[பேட்டை வாத்தியாரிடம் பட்டைத்தண்ணி தலைவிரிகோலமாக ஓடி வருகிறான். பட்டைத்தண்ணி பேட்டை வாத்தியார் என்பவை பட்டப் பெயர்களே. இயற்பெயர்கள் அவர்கட்கே மறந்துவிட்டிருக்கும்)

பட்டைத்தண்ணி: வாத்தியாரே! வாத்தியாரே!

பேட்டை வாத்தியார்: டேய் பட்டைத்தண்ணி ஏண்டா அலறிக்கிட்டு ஓடிவரே? என்ன நடந்துடுச்சு?

ப. த. என்ன நடந்துச்சா? என்ன நடக்கலே? நம்ம புரட்சித்தலைவர் நம்ம வவுத்திலே அடிச்சுப்புட்டாரு.

பே. வா.: டே! என்ன உளறிக்கின்னு இருக்க? நம்ம புரட்சித் தலைவரைப் பத்தி எவனாச்சும் தப்பு தண்டாவா பேசுனா எனக்கு அப்புறம் கெட்ட கோவம் வரும்!

ப. த.: கோபம் வரும் வரும் நம்ம பிசினசே போச்சு; நம்ம பொழப்புலே மண்ணடிச்சிட்டாரு புரட்சித் தலைவரு.

பே. வா: சொல்றத நல்லாச் சொல்லுடா

ப. த: நீ ரேடியோ கேக்கலே, பேப்பர் பாக்கலே! புரட்சிதலைவர் அவசரச் சட்டம் கொண்டாந்திட்டாரே! பட்டைத்தண்ணி சாராயம், வித்தா, குடிச்சா அதிகத் தண்டனையாமே நம்ம பொழப்பு என்னாவுறது?

பே. வா. அஹ் ஹ ஹ் ஹா [வாய்விட்டு அட்டகாசமாகச் சிரிக்கிறான்) இதுக்கா நீ இப்படி அலர்ற, நான் என்னமோ, ஏதோன்னு பயந்திட்டேன்.

ப. த.: இதவிட என்ன வரணுமாம் நம்ம பொழப்பே பூட்டுது நீ என்னடான்னா அட்டகாசமா சிரிக்கிறே.

பே. வா. அடே, கஸ்மாலம் நம்ம புரட்சித்தலைவரு போட்டிருக்கிற சட்டம் யாருக்குடா? நமக்கா? போடா பைத்தியம். அது சும்மா கண் தொடப்புக்குடா. இந்த பொம்பளங்களை ஏமாத்தி ஓட்டு வாங்கிறத்துக்குடா. எதிர்க்கட்சிக்காரனுங்களை மடக்குறத்துக்டா.

ப. த: என்னா வாத்தியாரே நீ சொல்றே; ஒண்ணும் புரியலையே

பே. வா. புரிஞ்சா நீ பேட்டை வாத்தியாராவுல்ல இருப்பே. பழைய சட்டமிருக்கே அது நம்மள என்னாபண்ணுச்சு. அதே போலத்தாண்டா இந்தப் புதுச் சட்டமும் நம்ம கிட்ட ஒண்ணும் பண்ண முடியாது. நீ எதுக்கும் கவலைப் படாதே.

ப. த. என்ன இருந்தாலும் எனக்கு என்னமோ பயமா இருக்கு வாத்தியாரே!

பே. த. நான் சொல்றேன் நீ கேக்கமாட்டேங்கிற. நா போயி எதுக்கும் நம்ம பகுதி வாத்தியாரை பாத்துட்டு வரேன். நீ கவலைப்படாதே.

காட்சி—2

இடம்: காவல் நிலையம் (சப். இன்ஸ்பெக்டரும் காவலர்கள் சிலரும்)

சப். இன்ஸ்:— பாத்தீங்களா நம்ம முதலமைச்சர் எவ்வளவு நல்லவர். கடுமையான அவசரச் சட்டமே கொண்டு வந்திருக்கார். எப்படியும் மதுவை ஒழிச்சே தீரணும்னு கங்கணமே கட்டிக்கிட்டிருக்கார். நாம இனிமே ரொம்ப ஆக்டிவ இருக்கணும். சரி 135 242, 823. வாங்க ரெய்டு போவோம். தேனும் பேட்டை குப்பத்திலேதான் சாராயம் காச்சுற கும்பல் அதிகம் இருக்கு. அதை இன்னைக்கு வளச்சு மடக்கி மாட்டிப்புடுவோம் மாட்டி. வாங்க போவோம்.

(நால்வரும் கிளம்பி வருகிறார்கள் குப்பத்தின் முகப்பிலேயே பேட்டை வாத்தியார் நின்று கொண்டிருக்கிறார். காவல் துறையினரைப் பார்த்து மிடுக்காக கை கூப்பியபடியே)

பே. வா. வாங்க வாங்க நீங்க ஏன் இங்கே வரணும். அவசரத் தேவையின்னு சொல்லி அனுப்பிச்சிருந்தா நானே ஏற்பாட்டோட வந்திருப்பேனே.

சப். இன்;— அந்தக் காலமெல்லாம் மலையேறிடிச்சு. இப்ப அவசரச் சட்டம் வந்திடுச்சு.

பே. வா: அவசரச் சட்டம் வந்தா மாமூலு சேர்த்துக் கொடுத்துட்டாப் போச்சு

சப். இன்: அதெல்லாம் அந்தக் காலம் நாங்க இப்ப ரெய்டு பண்ண வந்திருக்கோம்.

பே. வா.: [கோபம் கொப்பளிக்கிறது] என்னா வாத்தியாரே, நம்பள யாருன்னு புரிஞ்சுக்காமே பேசுறே. ரெய்டு பண்ணவா வாரீங்க ரெய்டு! எங்கே பண்ணுங்க பார்க்கலாம். (காவலர்கள் விரைப்பாக குப்பத்திற்குள் ஓடுகிறார்கள். பேட்டை வாத்தியாருடன் இருந்த ஆள் ஒருவர் இதற்குள் ஓடி செய்தியை சொல்லிவிடுகிறான். காவலர்கள் ஒரு திருப்பத்திற்குள் நுழைகிறார்கள். திடீரென்று மின்விளக்குகள் அணைகின்றன. பத்து பதினைந்து பேர் திடீர் என்று காவல்துறையினர் மீது பாய்கிறார்கள். நால்வரைப் பிடித்து ஒரு குடிசையில் கைகால்களைக் கட்டிப் போட்டு அடித்து நொறுக்குகிறார்கள்)

பே. வா., [சப் இன்ஸ்பெக்டரைப் பார்த்து] என்ன வாத்தியாரே சொன்னா கேக்கலியே... ரெய்டு பண்றீங்களாமே ரெய்டு. மரியாதையா நடந்துக்கிறதுன்னா அவுத்து விடுறேன். இல்லே இங்கேயே குளோஸ் பண்ணிப் புடுவேன்! ஆட்சி யாரு ஆட்சி னேன்! முதலமைச்சர் எங்க புரட்சித் தலைவராக்கும்.

[காவலர்கள் மிரண்டு போய், விட்டால் போதுமென்று கெஞ்சுகிறார்கள் இறுதியாக எச்சரித்து அவர்களை அவிழ்த்து விடுகிறார்கள். எதற்கும் உஷாராக எல்லோரும் குப்பத்தைவிட்டுத் தலைமறைவாகிவிடுகிறார்கள்]

காட்சி 3

[சப் —இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டேபிள்களும் இன்ஸ்பெக்டரிடம் சென்று முறையிடுகிறார்கள்)

இன்ஸ் : ஏனய்யா உங்களை யார் ரெய்டு போகச் சொன்னது?

சப். இன்.: கடுமையான அவசரச்சட்டம் வந்திருக்கேன்னு .. [இழுக்கிறார்]

இன்ஸ்; அவசரச்சட்டம் வந்தா இப்படி அவசரப்படணுமா? இன்னும் ஐ.ஜி.கிட்டே கமிஷனருக்கிட்டே எலாம் இருந்து இன்ஸ்டரக்ஷன் வரலே அதுக்குள்ளே அவசரப்பட்டு இப்படி அடி வாங்கிக்கிட்டு வந்து நிக்கிறீங்களே. சரி, சரி வாங்க நாம போய் ஒரு மிரட்டு மிரட்டிவிட்டு வருவோம்.

(பத்துப்பதினைந்து கான்ஸ்டபிள்களுடன் வேனில் குப்பத்திற்கு வந்து எங்கே அவன் எங்கே இவன் என்று ஆர்ப்பாட்டம் செய்கிறார் இன்ஸ்பெக்டர், ஆனால் ஒரு ஆள் கூட குப்பத்தில் இல்லை, பெண்கள் எல்லாம் கூடி அழுது ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்)

இன்ஸ்; இப்ப என்ன நடந்திடுச்சு? இப்படி ஒப்பாரி வைக்கிறீங்க?

பேட்டை வாத்தியார் வந்தா என்னை வந்து பார்க்கச்சொல்லுங்க. (என்று சொல்லிவிட்டுத் திரும்பி விடுகிறார்கள்.)

காட்சி 4

(அதேநேரத்தில் பேட்டை வாத்தியார் பகுதி வாத்தியாரைச் சந்திக்கிறார்.)

பே. வா.: என்னா வாத்தியாரே இப்படிப் பண்ணிப் புட்டாங்க. அவசரச் சட்டம் போட்டு நம்பளை எல்லாம் அழிக்கப் பாக்குறாங்க. நாங்க கட்சிக்கு எவ்வளவு பாடுபட்டிருக்கிறோம், எவ்வளவு நன்கொடை கொடுத்துக்கிட்டுருக்கோம்.

ப. வா.: இப்ப என்ன நடந்திடுச்சு. நீங்க எப்போதும் போலவே உங்க பிசினசை நடத்தலாம், அதைத் தடுக்காது அவசரச் சட்டம். இது சும்மா கண்துடைப்புக்காக.

பே. வா.: நீங்க இப்படிச் சொல்லுவீங்க. ஆனா இப்போ எங்க பேட்டையிலே போலீசு ரெய்டு பண்ணுது.

ப. வா.: போலீஸ் ரெய்டா? இருக்காதே.

பே. வா.: இருக்காதா? இப்பத்தானே அங்கே இருந்து ஓடிவர்றேன். நான் சொல்லிப் பார்த்தேன். கேக்கலே. அப்புறம் கட்டிப்போட்டு வாங்கு வாங்குன்னு வாங்கி அனுப்பிச்சுட்டு இங்கே ஓடிவர்றேன். இந்நேரம் போலீசு குப்பத்திலே என்ன அட்டகாசம் பண்ணுதோ?

ப. வா: போலிசக் கட்டிப் போட்டு அடிச்சீங்களா? ஐய்யோ இது என்ன வம்பாப்போச்சு? இப்ப நம்ப ஆளுங்கள்ளாம் குப்பத்திலயா இருக்காங்க?

பே வா: அது என்னா வாத்தியாரே அப்படி கேட்கிறீங்க இருப்போமா என்ன? எல்லாம் ஓடி ஒளிச்சிட்டாங்க. நான் மட்டும் இங்கே ஓடியாந்தேன், ஏதாச்சும் செய்யணும். இல்லேன்னா வம்பாப் போய்டும்.

பே. வா: சரிசரி நான் பார்த்துக்கொள்றேன். [யோசித்து] ஆங். நீ ஒண்ணு செய், உடனே மதுவிலக்கு மாநாடு ஒண்ணு போடு. அதுக்கு நீ தான் தலைவர். நம்ம முதலமைச்சர் கலந்துக்குவாரு மாநாடு வர்ற ஞாயித்துக்கிழமை நடக்கணும் என்ன தெரிஞ்சுதா?

பே. வா: சரி வாத்தியாரே பிரமாதமா நடத்திப்புடுவோம்.

(மாநாடு பிரமாதமாக நடைபெறுகிறது. பேட்டை வாத்தியார் ஏக அமர்க்களமாகத் தலைமை தாங்குகிறார். பகுதி வாத்தியார் ஆர்ப்பாட்டமாக வரவேற்கிறார். முதலமைச்சர் மதுவிலக்கின் அவசியத்தை அழுத்தந்திருத்தமாக ஆணிஅறைந்தாற்போல் விளக்குகிறார். மதுவிலக்கை அமல்படுத்த மக்களின் ஒத்துழைப்பைக் கோருகிறார். இறுதியாக, அண்ணா நாமம் வாழ்க என்று கூறி முடிக்கிறார். மாநாடு இனிது முடிகிறது)

காட்சி—5

(மறுநாள் காலை மணி 10. பேட்டைவாத்தியார் வெகு கம்பீரமாகக் காவல்நிலைபத்திற்குள் நுழைகிறார். சப். இன்ஸ்பெக்டர் எழுந்து நின்று வணக்கம் கூறிவரவேற்கிறார்)

சப். இன்ஸ்: வணக்கம், வணக்கம். வாங்க வாங்க. நான் புரிஞ்சுக்காம ஏதோசெஞ்சுப்பிட்டேன். தவறாக நினச்சுக்காதீங்க (பணிவாகக் குழைகிறார்)

பே.வா:(மிடுக்காகபுன்முறுவல் பூக்க) அதெல்லாம் ஒண்ணுமில்லே. இனிமே எல்லாம் சரியாயிடும். பகுதி வாத்தியார் சொன்னார். மாமூல்ரேட் உசந்திருக்குன்னு அதுபடியே இனிமே கொடுத்துபுடுறேன் உம்...அப்புறம். வந்து உங்க பேருகூட புரமோஷன் லிஸ்டில் இருக்குண்ணுங்க நீங்க ஒண்ணுக்கும் கவலைப்பட வேண்டாம்

சப். இன்ஸ்: (அசட்டுச் சிரிப்புடன்) ஆமாங்க நீங்கள்ளாம் இருக்கப்போ எனக்கு என்னுங்க கவலை.

பே. வா: நான் அதெல்லாம் ஏற்பாடு பண்ணிபுட்றேன் சரி வரட்டுங்களா? (மிடுக்கோடு எழுகிறார்)

சப். இன்ஸ்:(அடக்கமாக எழுந்து நின்று) சரி போயிட்டுவாங்க அடிக்கடி வந்துபோய்க்கிட்டு இருங்க. நம்பவிஷயத்தை மறந்துடாதீங்க (கை கூப்பி வழி அனுப்புகிறார்)

நம் நாடு

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25.00

ஆறுமாத சந்தா ரூ. 12-50

மூன்று மாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இந்திய மருத்துவர்களின் மாபெரும் சாதனை

மேல்நாட்டு மருத்துவர்களுக்கு எந்தவிதத்திலும் தாங்கள் சளைத்தவர்கள் அல்லர் என்பதை இந்திய மருத்துவர்கள் மெய்ப்பித்திருக்கிறார்கள்.

சோதனைக் குழாய்மூலம் குழந்தைபெற்ற முதல் பெருமை பிரிட்டனுக்குச் சேரும். இப்போது — கல்கத்தாவிலிருக்கும் எஸ். கே. பட்டாசார்யா, சுபாஷ் முகர்ஜி, சுனித் முகர்ஜி — இந்த மூன்று மருத்துவர்களும் சோதனைக் குழாய் மூலம் வெற்றிகரமாக ஒரு குழந்தையைப் பெற்றெடுத்திருக்கிறார்கள்.

திருமணமாகிப் பதினாறு ஆண்டுகள் ஆகியும் மழலைச் செல்வம் பெறாத ஒரு தம்பதியரின் உயிரணுக்களை இணைத்து சோதனைக் குழாயில் பிறப்பிக்கப்பட்ட இக் குழந்தை, பிற குழந்தைகளைப் போல் நலமாக உள்ளது.

உலகின் இரண்டாவது 'சோதனைக் குழாய் குழந்தையைப்' பெற்றெடுத்து மகத்தான சாதனை புரிந்துள்ள இந்திய மருத்துவர்களை உலகமே போற்றுகிறது.

பொதுக்குழு-செயற்குழு நியமன உறுப்பினர்கள்

கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் அறிவிப்பு!

சென்னை, அக். 11—

தி மு. க. தலைமைச் செயற்குழுவுக்கும், பொதுக்குழுவுக்கும் நியமன உறுப்பினர்கள் பெயரை இன்று கழகப் பொதுசெயலாளர் வெளியிட்டார். பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களது அறிவிப்பு வருமாறு:

தி. மு. கழகப் பொதுக்குழு உறுப்பினர்கள் நியமனம்

கழகச் சட்ட திட்டம் விதி 19 பிரிவு 2 —இன்படியும், அதில் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையை அதிகப்படுத்தி அடுத்துக் கூடும் பொதுக் குழுவில் திருத்தம் செய்வதற்கான அனுமதி பெறும் அடிப்படையிலும் தி.மு. கழகப் பொதுக் குழு உறுப்பினர்களாகக் கீழ்க் குறிப்பிட்டுள்ள தோழர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

சென்னை மாவட்டம்

ஜி. லட்சுமணன், எம்.பி, முரசொலி மாறன், எம்.ஏ., எம்.பி., டி. கே. கபாலி, எம்.எல்.ஏ., மைனர் மோசஸ், பி.ஏ., பி.எல்., டி. ஆர். பாலு, இரா. மு. மனோகரன், வி. எம். ஆர். சபாபதி, திருமதி அமுதா ராகவன், போலீஸ்வே. கண்ணன், ஏ.எஸ். மணவைத் தம்பி, அ. செல்வராசன், எம்.எல்.ஏ., என். ஏ. ரசீத், டபிள்யூ. பி.பி. சுந்தரம், அ. சங்கரையா, திருப்பத்தூர் இராமமூர்த்தி, திருமதி மாடிலட்சுமி, டாக்டர் பொற்செல்வி, ஆர். கணபதி (தோழமைக் கழகம்), செல்வி தன்மானம்.

செங்கற்பட்டு மாவட்டம்

டி. எம். பார்த்தசாரதி, கி. பஞ்சாட்சரம்; மா.பொ. வேதாசலம், பம்பல்நல்லதம்பி, மீனம்பாக்கம், வைத்தி, கே. டி. எஸ். மணி, திருவள்ளூர் நாகரத்தினம், பி.ஏ., பி.எல்., திருவொற்றியூர் மாசிலாமணி திருமதி கிரிஜா பொன்னுவேல், திருமதி புஷ்பா.

வட ஆற்காடு

புலவர் கே. கோவிந்தன், இரா. தருமலிங்கம், தோப்பூர் திருவேங்கடம், திருவண்ணாமலை குமாரசாமி, வேலூர் இளஞ்செழியன், எம். பன்னீர் செல்வம், திருப்பத்தூர் சி. கே. சின்னராசு, காட்பாடி பி. கே. முனுசாமி, காட்பாடி வி. ஏ. மஜீத், ஆரணி ஏ. சி. நரசிம்மன், ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, வி. எஸ். பாண்டியன்,

தென் ஆற்காடு

என். இராசாங்கம், வி. மாயவன், பொன். சொக்கலிங்கம், பண்ருட்டி ஏ. மணி, கள்ளக்குறிச்சி வேங்கடபதி, பி.ஏ., பி.எல்., கடலூர் தி. கிள்ளிவளவன் பி.ஏ., பி.எல்., விழுப்புரம் புலவர் வேங்கைமார்பன், சிந்தாமணி கோ செயராமன், கடலூர் சிவசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்., பரங்கிப்பேட்டை சிவலோகம், திண்டிவனம் டி. ஏ. எஸ். பாலன் பி.ஏ., பி.எல்., சிதம்பரம் ஏ. பி. டி. சுப்பிரமணியம், திண்டிவனம் வெங்கடராமன், பி.ஏ., பி.எல்., கடலூர் கி. கோவிந்தராசன் கள்ளக்குறிச்சி டி. கேசவலு, சவுகத் அலி.

தஞ்சை மாவட்டம்

நாகூர் அனிபா, பி.எஸ். தங்கமுத்து, வை.சுப்பிரமணியம், தஞ்சை ஏ.வி. பதி, ஏ.கே. சுப்பையா, எஸ். கே.வடிவேலு, ச.தங்கவேல், சித்தமல்லி சோமசுந்தரம், நன்னிலம் நடராசன், நாடியம் இராமையன், பட்டுக்கோட்டை தம்பி திருச்சிற்றம்பலம், தி. து பூண்டி குப்புசாமி, பி.ஏ., பி.எல்.,

புதுக்கோட்டை மாவட்டம்

காடுவெட்டி அ. தியாகராசன், எம்.எஸ். அப்துல் மஜீது, புதுக்கோட்டை உடையப்பன் பி.ஏ., பி.எல்.,

திருச்சி மாவட்டம்

எம். எஸ். வெங்கடாசலம், எம்.ஏ., பி.எல், ஜி. பராங்குசம், து. ப. அழகமுத்து, கு. காமாட்சி, எம். எஸ். மணி, குளித்தலை முத்துகிருஷ்ணன், இரா. வெற்றிகொண்டான், ஜே. எஸ். இராசு, பி.ஏ., பி.டி., கரூர் பி. ஆர். குப்புசாமி, பி.ஏ., பி.எல்., குளித்தலை எம். கந்தசாமி, பி.ஏ., பி.எல்., திருச்சி சம்பந்தம் பிஏ, பிஎல்,

சேலம் மாவட்டம்

நாமக்கல் மு. பழனிவேலன், இராசிபுரம் இராமசாமி, திருச்செங்கோடு டி. பி. ஆறுமுகம், ஓமலூர் வி. செல்லதுரை, எஸ்.ஏ. அன்புக்கரசு, என்.ஏ. நடேசன் கன்னங்குறிச்சி தங்கவேல், ஜே. கே.கே. சுந்தரம், கோபி. தமிழரசு, திருமதி கமலம் மாணிக்கம், சேலம் பழனியப்பன், சேலம் மாரியப்பன்.

தர்மபுரி மாவட்டம்

பருகூர் திம்மராயன், ஆர். பி. முருகன்

மதுரை மாவட்டம்

பி. மலைச்சாமி, பெரியகுளம் கே. எம். எம். மேத்தா, ஏ. எம். டி. நாச்சியப்பன், கே. வி. விக்கிரமாதித்தராசன், அக்கினிராஜ், பி.ஏ., நீ. அன்புச்செழியன், பி.ஏ., பழனி கே. கிருஷ்ணமூர்த்தி, தேனி. மு. தங்கராசன், செ. தம்பித்துரை. திருமதி நூர்ஜகான் பேகம்

மதுரை மாநகர் மாவட்டம்

மதுரை கூடலரசன், மதுரை தாவூது, திருமதி தேவகி பாண்டியன், மதுரை வி. என். லிங்கம்.

கோவை மாவட்டம்

பி. ஏ. சாமிநாதன், எம். எஸ். தேவசகாயம்; எஸ். ஏ. இராசமாணிக்கம், ஏ. பி. சண்முக சுந்தரம், குட்டப்பாளையம் சாமிநாதன், எம். எஸ். தூயமணி, ஈரோடு சுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்., மேட்டுப்பாளையம் ரசாக், கோவை ஆர். மோகன், அத்தாணிபாபு, விடுதலை விரும்பி பி. ஏ., சக்தி கதிர்வேலு, ஈரோடு மதார்சா, கோவை மணியம்.

கிழக்கு முகவை மாவட்டம்

வி. மலைக்கண்ணன், காரைக்குடி ராம. சுப்பையா; பெரி. அழகு, பாகனேரி பி. திருஞானம், த. சோணையா டி. கே. சிறைமீட்டான், தேவகோட்டை பெரி. சண்முகம், திருமதி கமலம் செல்லத்துரை, கடலாடி எஸ். ராமலிங்கம்.

மேற்கு முகவை மாவட்டம்

அருப்புக்கோட்டை சிவ. சண்முகசுந்தரம்; ச. அமுதன், பெ. சீனிவாசன், அருப்புக்கோட்டை நல்லதம்பி, திருமதி சக்தி கோதண்டம், திருவில்லிபுத்தூர் வைகுந்தன் பி.ஏ., பி.எல்.

நெல்லை மாவட்டம்

கணபதி இராம சுப்பையா எம்.ஏ. பாளை என். சண்முகம், எம்.ஏ., பி.எல்., நெல்லை புகாரி, நெல்லை டாக்டர் பி. பத்மநபன், ஏ. எல். சுப்பிரமணியம் பி.ஏ., பி.எல்; ஆ. திராவிடமணி எம். எல். சி., அலி சேக்மன்சூர், புளியங்குடி பழனிச்சாமி, வ. ஜெகவீர ராஜேந்திரன், தூத்துக்குடி. அய்யாச்சாமி, திருவை. அண்ணாமலை,

(9-ம் பக்கம் பார்க்க)

11—ம் பக்கத் தொடர்ச்சி

தேசாய் ஒரு 'அசல் ஜனநாயக் கருத்தை' வெளியிட்டிருக்கிறார். அவர் யாருக்கும் கணக்குக் காட்ட மாட்டாராம்; கணக்குக் காட்டத் தேவையில்லையாம். கடவுள் ஒருவருக்கே அவர் கணக்குக் காட்டுவாராம்; கடவுளுக்கே கணக்குக் காட்ட கடமைப் பட்டிருக்கிறாராம். ஆகா! என்ன ஜனநாயகம்' எவ்வளவு பெரிய ஜனநாயகப் பண்பு!

ஆங்கில நாடு ஜனநாயகத்தின் தொட்டில் என்று அழைக்கப்படுகிறது. ஆனால் அங்கு இன்றும் முடிபுனைந்த அரசி இருக்கிறார். ஆனாலும் அவர் ஓர் அடையாளச் சின்னமே; அலங்காரச் சின்னமே. ஆங்கில நாட்டில் அரசர்களின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்திப் படிப்படியாகக் குறைத்து வெறும் அலங்காரச் சின்னமாக மாற்ற அந்நாட்டு மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் பல ஆண்டுகள் தொடர்ந்து போராட வேண்டியிருந்தது. வரம்பிலா முடியாட்சியிலிருந்து உண்மைப் பாராளுமன்ற ஜனநாயக ஆட்சிக்கு வந்து சேர பல நூற்றாண்டுகள் ஆயின.

அக்கால மன்னர்கள் தாங்கள் மகேசனின் பிரதிநிதிகள் என்றும் மக்களை அதிகாரம் செலுத்த மகேசனால் படைக்கப்பட்ட மகேசனின் வாரிசுகள் என்றும் வாதிட்டார்கள். அவர்கள் மக்களுக்கோ, மக்களின் பிரதிநிதி சபையான நாடாளுமன்றத்திற்கோ கட்டுப்பட்டவர்களோ அல்லது அவர்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர் இல்லை என்று வற்புறுத்தினார்கள். அவர்கள் ஆண்டவன் ஒருவனுக்கு மட்டுமே பதில் சொல்லக் கடமைப் பட்டவர்கள் என்று வழக்காடினார்கள்.

அந்தக் கால மன்னர்களின் தோரணையில் — தொனியில் தான் மக்களாட்சிப் பிரதமர் பேசியிருக்கிறார். மன்னர்கள் பேசியதாவது பொறுத்துக் கொள்ளக் கூடியது. அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் இல்லை. மன்னர் மகன் மன்னன் எனும் பிறப்புரிமையால் மன்னர்களானவர்கள். ஆனால் பிரதமரோ மக்களாலும், நாடாளுமன்றத்தாலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர். தேர்ந்தெடுத்தவர்களுக்கே இவர் கணக்குக் காட்ட மாட்டாராம.

இந்தியா ஒரு ஜனநாயகக் குடியரசு (Democratie Republic) என்று அரசியல் சட்டம் பிரகடனம் செய்கிறது. 1950-ல் இது குடியரசு நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டது. இது நாடாளுமன்ற ஜனநாயக நாடு (Parliamentery Dem cracy) சுதந்திரம் அடைந்து 30 ஆண்டுகளுக்கு மேலாகவிட்டது. 6 பொதுத் தேர்தல்கள் நடந்து முடிந்துவிட்டன. இனியும் இந்தியாவை இளம் ஜனநாயக நாடு (youngdemocracy என்று கூறுவதில் பொருள் இல்லை.

இது பெரிய — முதிர்ந்த ஜனநாயக நாடு. ஆட்சி புரிவதோ ஜனதா. ஜனதாவோ தன்னைச் சுதந்திரத்தின் பாது ஜனநாயகத்தின் காவலன் என்று பறைசாற்றிக் கொள்கிறது. ஆனால் அதன் பிரதமரோ வரம்பற்ற அதிகாரத்தைப் பெற்ற பரம்பரை மன்னனைப்போல் பேசுகிறார். இது ஜனநாயகப் பண்பின் அடையாளமும் இல்லை ஜனநாயக அமைப்பின் அறிகுறியும் இல்லை. இதனை நாடு அறிந்து கொள்ளத் தவறிவிடக் கூடாது. தவறினால் ஏற்படும் ஆபத்தை யாரும் அணைபோட்டுத் தடுத்திடவும் முடியாது.

குமுதமா கேட்பது?

"சாத்தான் வேதம் ஓதுமா? ஓதாதுதான்.' ஆனால் அசைக்க முடியாத இந்த முடிவில் இருந்து 12—10—78 குமுதம் இதழ் நம்மை மாற்றி விட்டது.

'கலைஞரே, நியாயமா?'

கேட்பது குமுதம்!

கலைஞரைப் பார்த்து நியாயமா? என்று குமுதம் கேள்வி கேட்க முடியுமென்றால்,

சாத்தான் ஏன் வேதம் ஓதாது?

'சாத்தான் வேதம் ஓதுவது போல' என்று சொல்வதை விட,

'குமுதம் நியாயம் கேட்பது போல' என்று பழமொழியையே மாற்றிக் கொள்ளலாம் என்பதே நம் கருத்து.

நடிகரே நாடாளும் முதல்வராக வந்துவிட்ட இந்நாட்டில் யார் வேண்டுமானாலும், எவரை வேண்டுமானாலும் நியாயம் கேட்பது குற்றமல்ல இல்லாவிட்டால்,

கலைஞரைப் பார்த்துக் குமுதம் கேள்வி கேட்குமா!

ஓராண்டுக்கும் மேல் ஆயிற்று நடிகர், முதல்வர் பதவியை ஏற்று.

இதுவரை, ஒரே ஒரு முறையாவது எம்.ஜி. ஆரைப்பார்த்துக் குமுதம் ஏதாவது கேட்டதுண்டா?

ஆளுங்கட்சி உறுப்பினர் அதுவும் சட்டமன்ற உறுப்பினர் காவல் நிலையம் செல்கிறார்; கைதியை எம். ஜி. ஆர். பாணி சண்டைக் காட்சியோடு விடுதலை செய்கிறார்.

எம். ஜி. ஆரே 'இது என்ன நியாயம்'? என்று, நடவடிக்கை எடுக்கப்படாத கொடுமையைச் சுட்டிக்காட்டிக் கேட்டதுண்டா குமுதம்?

தமிழகத்தின் தலைநகரத்தில் சாராயச் சண்டை சந்துக்குச்சந்து நடைபெற்ற போது, ஆளுங்கட்சி அமைப்பாளர்களின் அடாவடித் தனத்தை அடக்காமல் இருந்த அநியாயத்தை எடுத்துக்காட்டி எம். ஜி. ஆரே, இது என்ன நீதி? என்று குமுதம் கேட்டதுண்டா?

சாதிக்கலவரம், கற்பழிப்பு, காவல் நிலையம் தாக்குதல் என்றெல்லாம் ஆளுங்கட்சி வீரர்களால் அராஜகம் செய்யப்பட்டபோது, எம்.ஜி.ஆரே நியாயமா?' என்று குமுதம் குரல் எழுப்பியதுண்டா?

ஊமையாகப் பேசாமல் இருந்தே உழைப்போர் தம் போராட்டங்களை ஒழித்துக் கட்டும் செயல் வீரர் எம். ஜி. ஆரைப் பார்த்து இன்றுவரை இது என்ன ஆட்சி முறை? என்று கேட்டதுண்டா குமுதம்!

போனது போகட்டும்!

புட்டலூர் தண்டபாணி கொலை பற்றிச் சட்டமன்றத்தில், கலைஞர் கேட்டாரே நியாயம் அது குமுதத்தின் காதில் விழுந்திருக்க வேண்டுமே!

அது பற்றி,

முரசொலியும், அலைஓசையும், இனமுரசும் அணு அணுவாக அலசி அராய்ந்து தண்டபாணியின் கொலை பற்றித்

தென்னகன்

தர்மயுத்தம் நடத்துகின்றனவே. அது குமுதத்தின் மூளைக்கு எட்டியிருக்கும் என்று நம்புகிறோம்!

அத்தோடு,

சட்டமன்ற உறுப்பினர் பட்டாபிராமனின் பட்டாளம் கமலா என்னும் ஆதரவற்ற ஒரு அனாதையைத் துகிலுரித்துத் துடுக்குத்தனங்கள் பல செய்து தங்கள் வீரத்தைக் காட்டியுள்ளார்களே அதுபற்றியும் குமுதம் அறிந்திருக்கும் என்று நம்புகிறோம்!

அந்த நம்பிக்கையின் அடிப்படையில் கேட்கிறோம். குமுதம் இனியாவது எம், ஜி. ஆரைப் பார்த்து நியாயம் கேட்குமா?

எம், ஜி. ஆர். என்றாலே வாலைச் சுருட்டிக்கொள்ளும் குமுதம் இப்படியெல்லாம் நியாயம் கேட்காது. ஆனால் கலைஞர் என்றால் மட்டும் காரணம் கேட்கும்; நியாயம் கேட்கும்! தர்மம் கேட்கும். இதுதான் குமுத வழி!

மதுவிலக்குபற்றி முதல்வர் அறிவித்திருக்கும் புதிய சட்டங்களைக் கலைஞர் வரவேற்கவில்லையென்றவுடன், குமுதத்தின் கண்களில் கண்ணீர் பொங்கி வழிகிறது; நெஞ்சு அடைத்துக் கொள்ளுகிறது; அழுகையும், ஆத்திரமும் போட்டியிடுகின்றன 'உடனே கலைஞரே, நியாயமா?' என்னும் கேள்வி பிறக்கிறது.

புதிய சட்டம் என்ன என்று விளக்குகிறது குமுதம்: பர்மிட் இல்லாமல் சாராயம், மது குடித்தால் ஆறுமாதம் சிறை தண்டனை, அதிகாரிகள் அமைச்சர்கள் குடித்தால் ஓர் ஆண்டு சிறைத்தண்டனை; இதைக் கருணாநிதி ஏன் எதிர்க்க வேண்டும்? என்கிறது குமுதம்

எடுத்ததற்கெல்லாம் 307' என்னும் எம்.ஜி. ஆர். இந்தப் புதிய சட்டத்தால் பொல்லாங்குகள் செய்யத் தயங்க மாட்டார் என்பதே கலைஞர் கருத்து.

கொலைவழக்கு, சதிவழக்கு என்றெல்லாம் தப்பாட்டம் ஆடும் தமிழக முதல்வர் இந்தச் சட்டத்தால் தவறுகள் பல செய்வார் என்பதே கலைஞர் வாதம்.

முதல்வர், முழுநேர நடிகராக இருந்தபோது, அவரால் பாதிக்கப்பட்டோர், பழி வாங்கப்பட்டோர் ஏராளம் என்பதைக் குமுதத்தை விட கலைஞர் நன்கு அறிவார்;

நடிகரால் வஞ்சிக்கப்பட்டோர், வாழ்விழந்தோர், வளம் இழந்து வதை பட்டோர் கணக்கினைக் குமுதத்தை விட கலைஞர் நன்றாக அறிவார்.

எனவேதான்,

இந்த அவசரச் சட்டமானது எதிர்க்கட்சிக் காரர்களைப் பழிவாங்கக் கூடியது; சொந்தக் கட்சிக்காரர்களை மிரட்டக் கூடியது என்கிறார்.

அவசரச் சட்டத்தின் அதிகாரம் தீயவழியில் பயன்படுத்தப்படும் என்று கலைஞர் கூறுவதை அறிந்து கொள்ளாதது போல் நடிக்கும் குமுதம், இந்தச் சட்டம் குடிப்பவர்களைத் தானே பாதிக்கும்; எனவே கலைஞர் குடிப்பவர்களுக்குச் சார்பாக வாதாடுவது ஏன் என்று கேட்கிறது;

எதிர்க்கட்சிக்காரர்கள்; சொந்தக் கட்சிக்காரர்கள் என்று கலைஞர் சொல்வது குடிப்பவர்களைத்தான் என்று புதிய பொருள் கூறும் குமுதம் குடிப்பவர்களுக்குச் சாதகமாகக் கலைஞர் வாதாடுகிறார் என்று குறும்பு செய்கிறது!

குதர்க்கம் பேசுவதற்கும், குறும்பு செய்வதற்கும் புத்தி அதிகம் தேவையில்லை என்பதைக் கோடிட்டுக் காட்டுவதற்காகவாவது நாம் குமுதத்திற்கு நன்றி கூறத்தான் வேண்டும்.

அதிகார துஷ்பிரயோகம் செய்யப்பட்டாலோ, ஆளும் கட்சியினருக்கும், காவல் துறையினருக்கும் மாமூல் உயர்ந்தாலோ, உண்மை நிலையை மக்கள் முன் வைக்கக் கலைஞர் போன்ற எதிர்க்கட்சியினர் இருக்கவே இருக்கிறார்கள் என்கிறது குமுதம்,

'மாமூல் உயர்ந்தாலோ' என்று குறிப்பிடுவதன் மூலம் தற்போது மாமூல் உள்ளது என்பதைக் குமுதம் ஒப்புக்கொண்டுள்ளது.

உண்மை நிலையை மக்கள் முன் வைக்கக் கலைஞர் இருக்கவே இருக்கிறார் என்று குறிப்பிடுவதன் மூலம் கலைஞர் மக்கள்முன் வைப்பதெல்லாம் உண்மையானவையே என்பதையும் குமுதம் ஒப்புக்கொண்டுள்ளது.

தன்னை உணர்ந்தோ, தன்னை மறந்தோ இரண்டு உண்மைகளை ஒப்புக்கொண்டுள்ள குமுதத்திற்கு நாம் நன்றி கூறத்தான் வேண்டும்.

கலைஞரே, நியாயமா? என்று கேட்கும் குமுதம்,

"அவசரச் சட்டம், பொது மக்களுக்கு மட்டும் தானா? அமைச்சர்களுக்கு இல்லையா?"

"குடிப்பவர்கள் கோலோச்சினால் அவசரச் சட்டம் வாழுமா?"

என்று எம். ஜி. ஆரைப் பார்த்துக் கேள்வி கேட்டுத் தன் பக்கம் இருக்கும் நியாயத்தைத் தெளிவுபடுத்தட்டும்!

அதன் பிறகு,
நீளட்டும் கலைஞரை
நோக்கிக் கை,

துக்ளகாபாதில் தூள்தூளான வீடுகள்

இருண்ட காலம் திரும்புகிறது!!

செப்டம்பர் இருபத்திரண்டு—

டில்லியிலிருக்கும் துக்ளகாபாத் காலனியில் வசிக்கும் மக்களைத் துயரத்தில் ஆழ்த்திய நாள்!

அவசர நிலைப் பிரகடனம் நடைமுறையில் இருந்தபோது இந்த டில்லியில் துர்க்மான் கேட் வாழ் மக்கள் எப்படித் தங்களுடைய சின்னஞ்சிறு வீடுகளை இழந்து பரிதவித்தார்களோ—

அதேபோல்—

செப்டம்பர் இருபத்திரண்டு துக்ளகாபாத் வாழ் மக்களுக்கும் வெறுந்தரையே வீடாயிற்று; விரிந்த வானமே கூரையாயிற்று! ஆம் — அவர்களுடைய வீடுகள் அனைத்தையும் புல்டோசர்களும், இராட்சத இயந்திரங்களும், கடப்பாரைகளும், சம்மட்டிகளும் இடித்து நொறுக்கித் தூள்தூளாக்கி மண்ணோடு மண்ணாகச் சாய்த்துவிட்டன.

இந்த இடிப்பு வேலைகள் திட்டமிட்டபடி, தவறாமல் நடக்க மத்திய போலீசாரும் மாநிலப் போலீசாரும் துப்பாக்கிகளுடனும், குண்டாந்தடிகளுடனும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளுடனும் மனித இயந்திரங்களாக' அணிவகுத்து நின்றனர்.

துக்ளகாபாத் காலனியில் இருக்கும் இரண்டாயிரம் வீடுகளில் ஏறக்குறைய பத்தாயிரம் மக்கள் வாழ்கின்றனர்; அரசு அலுவலர்கள் தனியார்துறை அலுவலர்கள், டிரைவர்கள், தொழிலாளர்கள் — அனைவரும் உழைப்பை நம்பியே உயிர்வாழும் நடுத்தர மக்கள்:

இவ்வீடுகள் அனைத்தும் சட்டபூர்வமானவைகள்; டில்லி மாநகராட்சி இவ்வீடுகளிலிருந்து தவறாமல் வரிகளையும் பெற்று வந்துள்ளது.

இப்போது இந்த வீடுகளை எதற்காக இடித்துத்தள்ள வேண்டும்? மாநகராட்சி காரணம் சொல்கிறது; "டில்லி மாநகரை நாங்கள் அழகு படுத்தப்போகிறோம்" என்று.

1971—ல் கட்டப்பட்ட வீடுகளை இப்போது எதற்காகத் தரைமட்டமாக்க வேண்டும்?

இதற்கும் மாநகராட்சி காரணம் சொல்கிறது;

"காலனி கட்டப்பட்ட இடம் டில்லி வளர்ச்சி வாரியத்திற்குச் சொந்தமானது. யாரோ இடைத்தரகர் ஏமாற்றி விற்றுவிட்டார். இடத்தை மீண்டும் வளர்ச்சி வாரியத்திற்குச் சொந்தமாக்க வீடுகளை இடித்துத் தள்ளுகிறோம்" என்று

இடிப்பதற்கு முன் அம்மக்களுக்கு 'நோட்டீஸ்' கொடுக்காதது ஏன்?

இதற்குக் கிடைக்கும் பதில், இதோ;

'நோட்டீஸ் கொடுத்திருந்தால் அம்மக்கள் நீதிமன்றங்களுக்குச் சென்று தடையுத்தரவு வாங்கி வந்திருப்பார்கள்.''

நெற்றி வியர்வை நிலத்தில் விழக் கடுமையாக உழைத்துக் காசு காசாகச் சேர்த்துக் கட்டிய வீட்டை இடிக்காதே தள்ளாதீர்கள் என்று முறையிட்ட மக்கள்மீது மத்திய போலீசாரும், மாநிலப் போலீசாரும் மிருகங்கள்போல் விழுந்து தாக்கியிருக்கிறார்கள்.

இயற்கையின் சீற்றத்தால் எழுந்த வெள்ளப்பெருக்கு ஒரு பக்கம் இதயமற்ற மனிதர்களால் ஏற்பட்டிருக்கும் பெருப்பக்கம் மறுபக்கம்... பாவம், பரிதாபத்திற்குரிய டில்லி வாழ் மக்கள்

'துக்ளகாபாத் காலனியிலும் பிற காலனிகளிலுமிருக்கும் வீடுகள் சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்படும். .' என்று வீட்டு வசதி அமைச்சர் சிக்கந்தர்பகத் கொடுத்த வாக்குறுதி—

நீரின் மேல் எழுதிய எழுத்தாயிற்று; காற்றோடு கலந்த வெறும் பேச்சாயிற்று..

வயதான பெற்றோர்கள், சின்னஞ்சிறு சிறார்கள், பால் மணம் மாறாப் பச்சிளங் குழந்தைகள் — ஆகியோரோடு வீடிழந்து, தங்குவதற்கு ஓர் இடமின்றி கண்ணீரும் கம்பலையுமாக.

வெறுந்தரையில் படுத்துறங்கும் மக்களின் துயரங்களை —'காந்தியின் புத்திரர்களான ஜனதா அமைச்சர்கள் கவனத்தில் கொண்டதாகவே தெரியவில்லை.

எப்படிக் கொள்வார்கள்?

அவர்களுடைய கவனம் முழுவதும் தங்களுடைய பிள்ளைகளும், உறவினர்களும் செய்துவரும் ஊழல்களை மூடிமறைப்பதிலும் உட்கட்சிப் போராட்டத்திலும் அல்லவா இருக்கிறது!



நனிக்கரும்பு

கருணாநிதி

"சதங்கை கொஞ்சும் பாதம் சதிமிதிக்கும் வானில் மிதக்கும்அவள் தாமரைக்கை மேலும் வதங்கலிலாச் சண்பகத்து நல்லரும்பு, சாடை புரிகின்ற விரல் கண்கவரும் செம்பவளக் காம்பு."

கவிஞர் பாரதிதாசனின் இந்தக் கவிதைக்கு அவள் ஆடற்கலை மூலம் அழகு தந்தபோது அந்தக் கலையரங்கமே மகிழ்ச்சிக் கூத்தாடியது. தாமரைக் கொடியொன்று, முக மலரும் இருமொட்டும்பெற்று உயிர் பெற்று, ஓவிய உறுப்பும் பெற்றுக் களிநடனம் புரிய வந்ததோ அந்தக் கலையரங்கில் என வியக்காதார் யாருமில்லை.

"ஆணிப் பொன்னாலே மேனி—அழகு ரத்தினத்தால் ஒரு பேழை — அது நிறைய ஒளி முத்து—ஆடற்கலை அவள் சொத்து" என அரங்கத்துச் செயலாளர் அருள்நம்பி பாராட்டுரை பொழிந்தபோது கையொலியால்அந்த மண்டபமே அதிர்ந்தது. அமுதா, பெயருக்கேற்ற அழகின் பூரிப்பும், அங்கமெலாம் இளமையின் ஆதிக்கமும் கொண்ட ஆடலரசி, அவள் ஆடாத மேடையில்லை: அவளைத் தேடி ஓடாத நெஞ்சமில்லை!

அன்று நூறாவது நடன நிகழ்ச்சி. அதனைத் தனது கலையரங்கத்திலேயே நடத்த வேண்டுமென்று அருள்நம்பி பெருமுயற்சி எடுத்து வெற்றி பெற்றார். அரங்கின் செயலாளர் அவர்.

கவிதை புனையக் கற்றவர் கலைத்தாயின் சேவையே வாழ்வின் இலக்கு எனக் கொள்கை முழக்கம் செய்து கொண்டிருப்பவர், ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளைக் கடந்து, அறுபது என எண்ணத்தக்க அளவுக்குஅனுபவமும் தோற்றமும் கொண்டவர்.

அவரது நிர்வாகத்தின் கீழ் இயங்கிக் கொண்டிருக்கிற அந்தக் கலையரங்கத்தில் எத்தனையோ கலை நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. ஆனால் அமுதாவின் நிகழ்ச்சியை அங்கு நடத்த வேண்டுமென்பதில் அவருக்கு எத்துணை ஆர்வம்! எத்துணை துடிப்பு! அவர் நினைத்தது நடந்தது. இலக்கியங்களில் நுழைந்து புலவர்களைக் கெஞ்சிக் காவியங்களைப் புரட்டிக் கடைசியாக ஒரு தமிழ்வளங்கொழிக்கும் பாராட்டுரையைத் தயார் செய்து, அதனை இரண்டு நாள் இரவு பகல் மனப்பாடம் செய்து, கனவிலே கூட அதனை உளறி, இத்துணைக்கும் பிறகு அன்று மேடையில் அமுதாவை வர்ணித்து, மன்றத்தின் பாராட்டுதலைப் பெற்றார்.

அவர் விரும்பியது மன்றத்தின் பாராட்டு மட்டுமா?

அமுதாவின் ஒர விழிகள் அவரை நோக்கி ஒருமுறை அசைந்தால் போதும்; அதற்காகவே அவர் அத்தனை நாள் கடுந்தவம் இயற்றினார். அருள் நம்பி கலையுலகில் செல்வாக்கு மிக்கவர். தமிழ் மேடைகளில் அவர் தோன்றாதிருப்பதில்லை. விழாக் கூட்டங்களில் அவரது முத்திரை எங்காவது இல்லாமல் இருக்காது. விருந்து கேளிக்கைகளில் அவர்தான் முன்னோடி. இப்படி அனைவரது கவனத்தையும் எப்படியாவது கவர்ந்து நினைவில் தன்னை ஒட்ட வைத்துக்கொள்வதில் திறமை மிக்கவர் அவரது சில பிடிக்காத செயல்களைக் கூடக் 'கிடக்கிறார் பாவம் வயதான மனிதர்' என்று பலர் மன்னித்து விடுவது வாடிக்கை. அவருக்கு என்னவோ; தன்னை வயதானவர் என்று குறிப்பிடுவதை விட வேறு வசைபுராணம் ஒன்று இருப்பதாகவே நினைப்பில்லை. அந்தவார்த்தையைத் தவிர வேறு எதைச் சொன்னாலும் தாங்கிக் கொள்வார். உலகின் இன்பங்களை இளமை உணர்வோடு அனுபவிக்கத் தக்க ஆற்றல் அவரிடம்இருப்பதை யார் மறுத்தாலும்அவருக்கு மனம் புண்ணாகிவிடும். அந்த உணர்வோடு அவர் தனது நடவடிக்கைகளைத் தொடர்ந்து கொண்டிருந்தார்.

அப்படிப்பட்டவர் அமுதாவின் அன்புப்பார்வையையே எதிர்நோக்கியதில் அவரைப் பொறுத்தவரையில் தவறில்லையல்லவா?

பாராட்டுரையை நிகழ்த்தி விட்டு மல்லிகை மாலையை அமுதாவின் கழுத்தில் அணிவிக்க அவளருகே சென்றார். அதற்குள் அமுதா அவர் இருக்குமிடம் நோக்கி வந்துவிட்டாள். மாலையைக் கழுத்திலேயே வாங்கிக் கொள்வாளா? அருள்நம்பிக்குச் சற்றுக்குழப்பம். கழுத்திலே வாங்கிக் கொண்டால், 'வயதானவர்தானே பரவாயில்லை' என்ற முறையில் வாங்கிக் கொண்டாள் என்று ஆகிவிடும். இதை அவரால் தாங்கிக்கொள்ள முடியாது. இதையெல்லாம் அவர் நினைத்துப் பார்த்து முடிவுக்குவருவதற்குள் அமுதா அவர் கையிலுள்ள மாலையைத் தனது அழகுக் கரங்களால் பற்றி வாங்கிக்கொண்டாள். அடடா; அப்போது அந்தக் கரங்களின் மென்மையை அவர் உணர்ந்துகொண்டார். மாலையைப் பற்றும்போது அவளது விரல்கள் தன் விரல்களைவிட்டு மெதுவாகத்தான் பிரிந்து சென்றன என்பதும் அவரைக் கிறுகிறுக்க வைத்தது.

அரங்கத்தின் திரை விழுந்தது.

அமுதா, ஒப்பனை அறைக்குள் சென்றாள். அவரும் கூடவே சென்றார். ஆடியகளைப்புத்தீர பாதாமிட்ட பால் கொண்டுவந்து தந்தார்கள் அவளுக்கு. அவளோ அதனை அருள்நம்பிக்குக் கொடுத்தாள். பால் கிண்ணத்தைத் தரும்போதுஇரண்டாவது முறையாக அந்த மலர்க்கரத்தின் மெல்லிய ஸ்பரிசம்அவரைஇன்பபுரிக்கு இழுத்துச் சென்றது.

"அமுதா! நாளைக்கு 'போன் பண்ணுகிறேன்:" என்றுவிடைபெற்றுக்கொண்டார் அருள்நம்பி.

"அவசியம் 'போன் பண்ணுங்க" என்றுவணங்கி விடைகொடுத்தாள் அமுதா.

"அவசியம் 'போன்' பண்ணுங்க" என்ற அந்தக் குயில்மொழி காட்டும் குறிப்பை நினைத்து நினைத்து மகிழ்ந்தவாறு வீட்டுக்குச் சென்றார் அருள்நம்பி.

★

எப்பொழுது விடியும் என்று இரவுப்பொழுதைச் சாபங்கொடுத்து விரட்டிக் கொண்டிருந்த அருள்நம்பி, காலை எட்டு மணிக்கெல்லாம் அமுதாவின் இல்லத்திற்கு 'போன்' செய்தார்.

வேலைக்காரி பேசினாள்.

"அம்மா தூங்குகிறார்கள்; உங்களைப் பத்து மணிக்குப் 'போன்' செய்யச்சொன்னார்கள்" என்று அவள்கூறியதும் பரக்கப் பரக்கக் காலைக் கடன்களை முடித்துவிட்டுக் கெடிகாரத்தின் முட்களைச் சவுக்கால் அடித்து ஓட்டிக் கொண்டிருந்தார்.

மணி பத்தாயிற்று! அமுதா வீட்டு 'போன்' நீண்டநேரம் மணி அடித்தது. யாருமே எடுக்கவில்லை. வெகுநேரம் கழித்து "ஹலோ" என்று ஒரு முரட்டுக் குரல் கேட்டது.

"யார், அமுதா வீடா? அமுதா இருக்குதா?"

"நோ! நோ! ராங் நம்பர்!"

"மன்னிக்கவும்"

அவன் இந்த மன்னிப்பைக் கேட்காமலே 'போனை'த் தடால் என்று வைத்துவிட்டான். அருள் நம்பிக்கு ஏதோ ஒரு வெட்கம்; மீண்டும் எண்களை உன்னிப்பாகக்கவனித்துக்கொண்டே 'போன்' செய்தார்.

"ஹலோ?"

ஆகா! அது அமுதாவின் குரல்தான். அருள் நம்பி எச்சில் விழுங்கிக் கொண்டார். தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

"நான்தான் அருள் நம்பி பேசறேன்!"

"அமுதாதான் வணக்கம்"

"என்ன சௌக்கியமா?";

"நீங்க இருக்கும்போது சௌக்யத்துக்கு என்ன குறை?"

அமுதா சிரித்தது அவர் காதில் விழுந்தது. அதற்குள் அவர் முகமெல்லாம் 'குப்' என்று வியர்த்து விட்டது.

"ம்? அப்புறம் என்னங்க?"

"ஒண்ணுமில்லே...என்ன உன் வீட்டிலே என்ன, எனக்கு விருந்து கிருந்து கிடையாதா?'

"ஓ...தாராளமாக! எப்ப வர்றீங்க! எப்ப வந்தாலும் விருந்து உண்டு."

"என்ன விருந்து?"

"எல்லா விருந்தும் உண்டு. உங்களுக்கு என்ன பிடிக்கும் மாமிசமா? சைவமா?"

"சைவமா! சேச்சே! மனிதன் மாமிசத்திற்குத்தானே அடிமை!'

"சரி; உங்களுக்குத்தனியா மாமிசம் சமைக்கச் சொல்கிறேன். நாங்களாம் சைவம்!"

"வேண்டாம்...வேண்டாம்...உனக்கு ஒரு சாப்பாடு; எனக்கு ஒரு சாப்பாடா? எனக்கும் சைவமே இருக்கட்டும் எப்ப வர்றது?"

"இன்னைக்குமத்தியானமே வாங்களேன்?

"பகல் விருந்து ரசிக்குமா? ராத்திரி எட்டு ஒன்பது மணிக்கு வரட்டுமா?"

"ஓ! வாங்க! கண்டிப்பா வரணும், வராம இருந்திடாதீங்க! நிச்சயம் வரணும்'

அருள் நம்பி அப்படியே ரிசீவரைக் கன்னத்தில் அழுத்திக் கொண்டு சற்று நேரம் மயங்கிய நிலையில் அமர்ந்து விட்டார் நினைவு வந்த பிறகு, உடலில் வழியும் வியர்வையைத் துடைத்துக் கொண்டு, 'அப்பனே முருகா! எல்லாம் உன் அருள்!" என்று வாய் விட்டுக் கூறிக் கொண்டே திருப்புகழ் புத்தகத்தைக் கையில் எடுத்து ஏடுகளைப் புரட்டத் தொடங்கினார்.

★ ★ ★

இரவு எட்டரை மணி, "வாங்க, வாங்க..." என்று அமுதா இளநகை சிந்தி வரவேற்க, அருள் நம்பி உடம்பெல்லாம் தணலான நிலை அவள் வீட்டுக் கூடத்தில் அமர்ந்தார்.

"என்ன வீட்டில் யாரையும் காணோம்?"

"எல்லாம் ஆறரை மணி ஆட்டத்துக்குச் சினிமாவுக்குப் போயிருக்காங்க! இப்ப வந்துடுவாங்க."

"மணி எட்டரை ஆயிட்டதே, இப்ப வந்திடுவாங்களா?"

"அது இன்னும் ஒரு மணி நேரம் ஆகும்; நீங்க இப்பவே சாப்பிடுறீங்களா?"

"நான் மட்டுமா? நீ?"

"இரண்டு பேருந்தான் இருங்க, இதோ வர்றேன்!" அடுக்களைப் பக்கம் அமுதா போன அழகைப் பின்னாலிருந்து அருள் நம்பி ரசித்துச் சொக்கிப் போனார். போதாக் குறைக்குச் சினிமாவில் வேறு அப்படிப்பட்ட காட்சிகளைக் காட்டி உள்ளங்களைக் கெடுத்து வைத்திருக்கிறார்கள் அல்லவா? அரை மணி நேரமாயிற்று அமுதா திரும்பி வர! அதுவரையில் அருள் நம்பியின் நெஞ்சத்தில் அமுதாவின்எத்தனையோவித விதமான நடனங்கள்.

"வாருங்கள், சாப்பிடலாம்." என்ற வண்ண மொழி கேட்டு வாரிச்சுருட்டி எழுந்து அவள் பின்னால் சென்றார். அலங்காரமான மேசையில் ஆடம்பரமான விருந்து, எதிர் எதிரே இருவரும் அமர்ந்துகொண்டனர். வேலைக்காரி இருவருக்கும் பரிமாறினாள்.

இடையிடையே இரண்டு மூன்று தடவை, அருள் நம்பியின் கால், எதிரே வீற்றிருந்த அமுதாவின் காலில் பட்டுவிட்டது. 'சிவ சிவ!' என்பார். 'பரவாயில்லை' என்று அவள் புன்னகை புரிந்த வண்ணம் உணவு அருந்துவாள். அவருக்குச் சாப்பிடவே முடியவில்லை. மேனி எங்கும் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்தது. ஒரு வழியாகச் சாப்பாட்டை முடித்துவிட்டுக் கூடத்திற்கு வந்தார்கள். தனது நடன நிகழ்ச்சி 'ஆல்பங்கள்' எல்லாவற்றையும் அவரிடம் கொண்டு வந்து கொடுத்தாள், அதைக் கொடுக்கும். போதும் வாங்கும் போதும் கைகள் உராய்ந்தன, அருள் நம்பிக்கு இருப்புக் கொள்ளவில்லை. மணியும் ஒன்பதரை ஆகிவிட்டது.

அறையைக் காட்டி, அவளிடம் ஏதோ சொல்ல ஆரம்பித்தார். அதற்குள் வாசலில் கார் வந்து நின்ற சப்தம்.

"ஓ சினிமாவுக்குப் போனவர்கள் வந்து விட்டார்கள்" என்றவாறு எழுந்து நடந்தாள். அவளது மேலாடை நாற்காலியில் சிக்கிக் கீழே விழுந்தது. அதனை எடுத்துச் சரிப்படுத்திக் கொண்டு அவரைப் பார்த்து ஒரு சிரிப்பையும் கொட்டிவிட்டுத் தெருப் பக்கம் போனாள். சினிமாவுக்குப் போனவர்கள் திரும்பி வந்தார்கள். அமுதா, தன் கையில் ஒரு குழந்தையைப் பிடித்துக் கொண்டு அருள் நம்பியிடம் வந்தவாறு "இவனைத் தெரியுமா? என்மகன்!" என்று அறிமுகப்படுத்தினாள். அமுதாவுக்கு ஒரு குழந்தை இருப்பது அவருக்கு முன்பே தெரியுமாதலால், "ஓ! நம்ப பயலா?" என்று ஆர்வத்தோடு கேட்டார். அதை அவ்வளவாகக் காதில் போட்டுக் கொள்ளாத அமுதா குழந்தையைப் பார்த்து,

"டே டே! கண்ணு! எங்கே தாத்தாவுக்கு வணக்கம் சொல்லு;"

என்று அவன் கரங்களைத் தொழுவதற்கான முறையில் கூப்பி வைத்தாள்.

அவன் அடம்பிடித்து வேறு பக்கம் போகவே, அவனைத் தொடர்ந்து போய் இழுத்துக் கொண்டு கூடத்திற்கு வந்தாள். கூடம் காலியாக இருந்தது!

அமுதா, ஒரு வெற்றிப் புன்னகையுடன் குழந்தையை முத்தமிட்டாள்.





கலைஞர் கடிதம்

வாழ்க இளஞ்செழியன்!

உடன்பிறப்பே,

கடிதம் எழுத இயலாமல் என் கை நடுங்குகிறது. எழுதிய எழுத்துக்கள் தெரியாமல் கண்ணீர்த் துளிகள் திரைபோட்டு நிற்கின்றன. கண்களைத்துடைத்தவாறும் நெஞ்சை அழுத்தியவாறும் உனக்கு எழுதுகிறேன்.

இளஞ்செழியன்! அந்தோ இளஞ்செழியன்! அந்த இளங்கொழுந்தினை சென்ற வாரம் தான் கடைசியாக மதுரை மாவட்ட சுற்றுப்பயணத்தில் பார்த்தேன். பன்னிரண்டு வயதுதான் இருக்கும். அந்தக்காலத்துவீரமணி போலக் கூட்டங்களில் பேசுகிறான் என்று மதுரை தாவூது பாராட்டிக் கூறி என்னிடம் அறிமுகப்படுத்தினார் பேசுவதோடு இருக்கக்கூடாது; நன்றாகப் படிக்கவேண்டும் என்று அந்தச் சிறுவனுக்கு அறிவுரை கூறினேன்,

அவன் திடீரென நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டு விட்டான் என்ற செய்தி இடிபோல் என் தலையில் விழுந்தது! நோயுற்றுப் படுக்கையில் விழுந்தான்; அதனால் இறந்துவிட்டான் என்ற செய்தியாக இருந்தால் கூட அந்த இளந்தளிரின் மரணத்தைத் தாங்கிக் கொள்ள முடியாதே! அய்யோ, கொல்லப்பட்டு விட்டானமே!

பழக்கடை பாண்டியும், இளஞ்செழியனும் திருவில்லிபுத்தூருக்கு அருகே ஒரு ஊரில் கூட்டம் பேசிவிட்டு அதன் பிறகு திருவில்லிபுத்தூர் கூட்டத்தையும் முடித்துவிட்டு மதுரைக்குத் திரும்பியிருக்கிறார்கள். திருவில்லிபுத்தூரிலேயே 'ஜீப்' ஒன்று அவர்களை வட்டமிட்டுக் கொண்டிருந்ததாம், அந்த ஜீப்பில் இருந்தவர்கள் ஆளுங்கட்சிக்காரர்களாம். கூட்ட நிகழ்ச்சிகள் முடிவுற்று உணவருந்திய பிறகு திருவில்லிபுத்தூரிலிருந்து மதுரை நோக்கிப் புறப்பட்டது கழகப்பேச்சாளர்களை ஏற்றிச் சென்ற கார்!

அந்தக் காரில் பழக்கடை பாண்டி, சங்கரபாண்டியன், வாழவந்தான், துரைபாண்டியன், இளஞ்செழியன் ஆகியோர் இருந்திருக்கிறார்கள். மூன்று நான்கு மைல்களைக்கூட கடக்கவில்லை. அதற்குள் அவர்களை வட்டமிட்ட ஜீப், இப்போது சுற்றிவளைத்துக் கொண்டதாம். சரமாரியான கற்கள் வீசப்பட்டதாம் அதில்ஒரு பெரிய கல், இளஞ்செழியனின் மண்டையைப் பிளந்து —அய்யகோ—அந்தச் சிங்கக்குட்டி அதே இடத்தில் உயிரைவிட்டதாம்.

கல்லடியால் தாக்குண்ட டிரைவர் காரை ஓட்ட முடியாமல் மயக்கமுற்று விட்டதால் கார் தட்டுத்தடுமாறி திசைகெட்டு சாலையை விட்டுக் கீழிறங்கி ஒரு புதரின் பக்கம் போய் நின்றதாம். அனைவரும் கல்லடியால் ஏற்பட்ட பலத்த காயங்களுடன்திருவில்லிபுத்தூர் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்கள்!

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

தனி மாநிலம் கேட்கும் ஜார்கண்ட் மக்கள்

பழனி சித்தார்த்தன்

தேசிய நீரோட்டத்தில் இரண்டறக் கலப்பது என்று சொல்லிக்கொண்டு, மாநிலங்களின் தனித்தன்மை, கலாச்சாரம், பண்பாடு, மொழி— ஆகியவைகளுக்குத்தீங்கிழைக்கும் போக்கை — இனி எந்த மாநிலமும்பொறுத்துக்கொள்ளாது.

மாநிலங்களின் பொருளாதாரத்திற்கு ஊறுவிளைவித்து, ஏறத்தாழ அவைகளைக் 'காலனிகள்'போல் நடத்தும் போக்கினை தடுத்து நிறுத்தவேண்டிய கட்டமும் நெருங்கிவிட்டது.

தம்முடையஇனம்,மொழி, பண்பாடு பொருளாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று குரலெழுப்புவர்களை நோக்கி 'பிரிவினைவாதிகள்' என முத்திரையிட்டு, மக்களை ஏமாற்றும் தந்திரமும் இனி எடுபடாது.

மாநில சுயாட்சிக்கான கோரிக்கையை தி. மு. கழகம் முதன் முதல் எழுப்பியபோது அக்கோரிக்கையின் நியாயத்தைநிராகரித்து கோரிக்கை எழுப்பிய தி. மு. கழகத்தின் மீது புழுதிவாறித் தூற்றினார்கள். ஆனால் இப்போது தேசியத்தையும் தாண்டி சர்வதேசியம் பேசும் பொதுவுடைமைக் கட்சித் தலைவர்களும் சுத்த தேசிய சுயப்பிரகாசங்களான காங்கிரசுத் தலைவர்களும் அல்லவா அக்கோரிக்கையை வற்புறுத்துகிறார்கள். வங்கத்து முதலமைச்சர் ஜோதிபாசுவும், கேரளத்து முதலமைச்சர் அந்தோணியும், கர்நாடக முதலமைச்சர் தேவராஜ் அர்சும் அல்லவா மாநில சுயாட்சிப் போர்க்கொடி உயர்த்துகின்றனர்.

மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வேண்டும், மாநில — மத்திய உறவுகள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்பனபோன்ற கோரிக்கைகளைசெவிமடுக்கவே மறுக்கும் மொரார்ஜி தேசாய் போன்றோரின் பிடிவாதமான போக்கு இறுதியில் எந்த விளைவை ஏற்படுத்தும் என்பதை,

'ஜார்கண்ட்'மக்களின் தனி மாநிலக் கோரிக்கை ஓரளவு படம் பிடித்துக் காட்டுகிறது.

பழங்குடியினரும், தாழ்த்தப்பட்டவர்களும், விவசாயிகளும் பெரும்பான்மையாக உள்ள 'ஜார்கண்ட்' பகுதி (Jharkhand) இந்தியவரைபடத்தில் (M p) ஒரு குழப்பமான இடத்தைப் பெற்றுள்ளது.

இதனுடைய பதினாறு மாவட்டங்கள் (Districts) நான்கு மாநிலங்களில்(States) பரவியுள்ளன. இராஞ்சி, தன்பாத், சிங்பூம், ஹசாரிபாக், கிரிதி, பாலமாவ், சாண்டல், பார்கனுஸ் ஆகிய ஏழு மாவட்டங்கள்பீகாரிலும்—புருலியா, மிட்நாப்பூர், பங்குரா ஆகிய மூன்று மாவட்டங்கள் மேற்கு வங்கத்தினும் - மாயூக்பான்ஜி, பம்பல்பூர்,கோன்நகர், சுந்தர்காரக் ஆகிய நான்கு மாவட்டங்கள் ஒரிஸ்ஸாவிலும் — சர்குஜா ராய்கார்ஆகியஇரண்டு மாவட்டங்கள் மத்தியப் பிரதேசத்திலும் இருக்கின்றன.

இவ்வாறு 'துண்டு துண்டாக' நான்கு மாநிலங்களில் பிரிந்திருக்கும் மாவட்டங்களை ஒன்றாக்கித் தனியாக 'ஜர்கண்ட்' என்ற மாநிலத்தை உருவாக்கித்தரவேண்டுமென்று ஜர்கண்ட் கட்சி, அனைத்திந்தியஜர்கண்ட்கட்சி, ஜர்கண்ட் முக்தி மார்கா கட்சி, பிர்சா சேவாதால் கட்சி ஆகிய நான்கு கட்சிகளும் போராடி வருகின்றன.

தனி மாநிலம் கோரும் இந்த கட்சிகளின் பொதுவான குறிக்கோள்கள்தான் என்ன ?

பொருளாதாரச் சுரண்டலிருந்து விடுதலை – வரதட்சணை, பால்யவிவாகம் போன்றகொடுமைகளை இன்னும் விடாது வலியுறுத்தி வரும் சனாதன இந்து மதச் சட்டங்களிலிருந்தும், அதன் பிரிவுகளிலிருந்தும் விடுபடல் — உயர்சாதிக்காரர்கள் நிலப்பிரபுக்கள் ஆகியோரின் ஆக்கிரமிப்புகளுக்கு ஒருமுடிவு கட்டுதல்– தங்களுடைய பண்பாடும், நாகரிகமும், மொழியும் பிற இனத்தவரால் சீர்குலையாமல் பாதுகாத்தல் — இவைகளே அந்தக்கட்சிகளின் பொதுவான தலையாய குறிக்கோள்கள் ஆகும்.

மத்திய அரசாங்கம் (அன்றைய இந்திரா காங்கிரசு அரசாங்கமாகட்டும் அல்லது இன்றையஜனதாஅரசாங்கமாகட்டும்) பெருமுதலாளிகளின் நலன்களைப் பாதுகாப்பதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளது; பெரிய பெரிய அணைகள், பெரிய பெரிய தொழிற்சாலைகள், பெரிய பெரிய ஆராய்ச்சி நிறுவனங்கள் கட்டுவதற்காக ஏராளமான பணத்தை வாரி இறைக்கும் மத்திய அரசாங்கம்'ஜர்கண்ட் பழங்குடியினரின், விவசாயிகளின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காகச் செய்தது என்ன? அதுமட்டுமல்ல, மத்திய அரசாங்கத்தின் நந்தப் பெறும் தொழிற்சாலைகளிலும் நிறுவனங்களிலும் எந்தப் பழங்குடியினருக்காவது வேலை வாய்ப்புக் கிட்டுகின்றதா என்றால், அதுவும் அல்லை!

இவ்வாறு –

அரசாங்கத்தின் மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை கூறும் 'ஜர்கண்ட்' கட்சிகள், இவைகளுக்கெல்லாம் பரிகாரம் சுானத் தனி மாநிலம் பெறுவதைத் தவிர வேறு வழியே இல்லை என்று ஆணித்தரமாக வாதிடுகின்றன.

ஜர்கண்ட்டின் பழங்குடியினரும், விவசாயிகளும், தனி மாநிலம் கேட்பதற்கு இன்னொரு முக்கியமான காரணம்—

பழங்குடியினர், விவசாயிகள் ஆகியோரின் வாழ்க்கை அவர்கள் மாநிலத்திலிருக்கும் காடுகளைச் சார்ந்தே இருக்கிறது; அவர்கள் பொருளாதாரத்தின் மையமே, காடுகள் தான்!

இலைகள்,பழங்கள், பல்வேறு விதைகள்— அவைகளிலிருந்து கிடைக்கும் எண்ணெய். ஆகியவற்றிலிருந்து பெறும் வருமானத்திலிருந்து வளமான வாழ்க்கை நடத்தி வந்தனர் அவர்கள்—ஒரு காலத்தில்

ஆம், ஒரு காலத்தில்!

– ஆனால் இன்று காடுகள் அரசாங்க சொத்துடைமையான பிறகு அவர்களின் வளமான வாழ்க்கை பாதிக்கப்பட்ட தோடுகாட்டிலாகா அதிகாரிகளின் 'அடிமைகளாகவும் ஆகிவிட்டார்கள் அவர்கள்!

குறைந்தகூலிகளைப்பெற்று கொத்தடிமைகள் நிலையிலிருக்கும் அவர்கள், அதிகாரிகள், 'காண்ட்ராக்டர்கள்' போன்றோரின் பேராசைக்குத் தங்களின் உழைப்பையும், காடுகள் தரும் செல்வங்களையும் 'தாரைவார்த்து' வருகின்றனர்

–இதற்கு ஒரு முடிவு கட்ட— தனிமாநிலம்பெறுவதைத்தவிர வேறு வழியே இல்லை என்கின்றனர் அவர்கள்:

தனி மாநிலக் கோரிக்கையைக் கைவிட்டு விடும்படி மத்திய அரசாங்கம் வழக்கப்படி 'உபதேசம்' செய்து வருகிறது. ஆனால் 'எந்த விலை கொடுத்தாவது' தனி மாநிலம் பெற்றே தீருவோம் என அம்மக்கள் போராடி வருகின்றனர்;

கடந்த ஆண்டு ஜூலைத் திங்கள் இரண்டாம் தேதி ஜர்கண்ட் கட்சி தலைவரான நிரல் எனிம்ஹோராவுக்கும்; பிரதமர் மொரார்ஜிதேசாய்க்கும் இடையே நடந்த உரையாடலின் ஒரு பகுதி இங்கே நினைவுகூறத் தக்கது;

மொரார்ஜி தேசாய் ;— நீங்கள் எல்லோரும் மகிழ்ச்சியோடு வாழ ஆவன செய்கிறேன்; ஆகவே 'ஜர்கண்ட்' தனி மாநிலக் கோரிக்கையைக் கைவிடுங்கள்.

ஹோரா :—எப்படி?

மொ. தேசாய்: ஏராளமான பணத்தை உங்களுக்காகச் செலவிடுகிறோம்;

ஹோரா :– கடந்து போன வருடங்களில் எவ்வளவு பணம் செலவிட்டீர்கள் என்பது அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம்; ஆனால் எதுவுமே செய்யப்படவில்லை.

மொரார்ஜி தேசாய் :—'சோட்டா நாக்பூரை (ஜர்கண்டின் ஒரு பகுதி) புறக்கணித்தால் அதை நீங்கள் இழந்து விடுவீர்கள்' என்று பீகார் அரசாங்கத்திடம் நான் சொல்கிறேன்.

ஹோரா :—வெள்ளாட்டைப் பாதுகாக்கும்படி ஒரு புலியிடம் கோருவதுபோல் இருக்கிறது, நீங்கள் சொல்வது!

"எங்களுடைய மூதாதையர்கள் காட்டு மிருகங்களோடு போராடி ஜர்கண்ட்டை உருவாக்கினார்கள்: நாங்களும் போராடி ஒரு ஜர்கண்ட் மாநிலத்தைப் பெற்றே தீருவோம்..." இவ்வாறு முழங்குகிறார் ஷிபு சரோன். தனி மாநிலம் கோரும் கட்சிகள் ஒன்றின் தலைவர் அவர்!

—இந்திய வரைபடத்தில் 'ஜார்கண்ட்' என்றதனி மாநிலம் இடம் பெறுமா அல்லது வடநாட்டுஏகாதிபத்தியத்தின் ஈவிரக்கமற்ற ஒடுக்குதலால் தனி மாநிலம் கோருவோரின் முயற்சிகள் அனைத்தும்விழலுக்கிறைத்த நீராகிவிடுமா என்ற கேள்விகளுக்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்!

★★★★★★★★★★★★★★★

பொதுவுடைமை கட்சித் தலைவரின் பாராட்டு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தந்தை போலிருந்த அண்ணாதுரை நாடாளுமன்ற மேலவையில் மொழிப் பிரச்சினைபற்றியும் தமிழ் நாட்டின் பிரச்சினைபற்றியும் நிகழ்த்திய உரைகள் நாடாளுமன்ற வரலாற்றில் இடம்பெற்ற ஒன்றாகும்.

[ஹிரேன் முகர்ஜி எழுதியுள்ள "போர்ட்ராய்ட் ஆஃப் பார்லிமெண்ட்" என்ற நூலிலிருந்து]

★★★★★★★★★★★★★★★

★★★★★★★★★★★★★★★

ஐ. நா. வில் ஒலித்த இலங்கைத் தமிழர் குரல்!

"இலங்கையில் ஆட்சி செலுத்தும் சிங்கள அரசு தொடர்ந்து தமிழர்களைப் படுகொலை செய்து வருகிறது. அடக்கி ஒடுக்கப்பட்டுவரும் தமிழ் ஈழச் சிறுபான்மை நாட்டின் பிரதிநிதியாக இங்கு நான் பேசுகிறேன். இங்கு பேச எங்களுக்கு வாய்ப்பில்லை என்றால், வேறு எங்கு சென்று பேச எங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்? ஆகவே என்னைப் பேச அனுமதியுங்கள்..."

—கே. கே. வைகுந்தவாசகம் என்ற ஈழத் தமிழர் இவ்வாறு ஐ. நா. மன்றத்தில். இலங்கை வாழ் தமிழர்களின் துயரங்களை எடுத்துரைக்கத் துவங்கியபோது– ஐ நா. மன்றத்தில் பெருத்த பரபரப்பு ஏற்பட்டது. இலங்கை வெளிவிவகாரத் துறை அமைச்சர் பேச அழைக்கப்பட்டபோது வைகுந்தவாசகம் மேடைக்கு விரைந்து சென்று பேசியிருக்கிறார்

'ஆள் மாறாட்டம்' ஏற்பட்டுவிட்டதைத் தாமதமாக உணர்ந்த அதிகாரிகள் பிறகு வைகுந்தவாசகத்தை மன்றத்திற்கு வெளியே அழைத்துப் போயிருக்கிறார்கள்.

இலங்கையில் நீதிபதியாகப் பணியாற்றிய அவர் இப்போது இலண்டனில் வழக்கறிஞராகத் தொழில் செய்து வருகிறார்.

★★★★★★★★★★★★★★★

பொதுக்குழு-செயற்குழு] [4-ம் பக்கத்தொடர்ச்சி

குமரி மாவட்டம்

அ. திரவியம், பி.ஏ., எம். சங்கரலிங்கம், எம்.ஏ., எம். எல் .சி. சு. வன்னியப் பெருமாள், ரசல்ராஜ், பி.ஏ., பி.எல்., ஜி. எம். ஷா, மைக்கேல்ராஜ் பி.ஏ., பி.எல்., ஜி. இராசகோபால், டாக்டர் பெர்னார்டு.

கருநாடக மாநிலம்

கி. சோழன், எஸ். இ. வேணுகோபால் வே. இளஞ்சேரன், ஏ. இராமசாமி, பி.காம்., பி.எல்.

ஆந்திர மாநிலம்

வே. நரசிம்மலு, திருப்பதி எஸ். வி. டி. வேலன்.

புதுவை மாநிலம்

எஸ். முருகையன், ஜி. பெருமாள்ராஜா எம்.எல்.ஏ. காரைக்கால் சிவகுமார்.

இவர்களுடன், தலைமைக் கழகச் செயலாளர்கள், இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர் அந்தந்த மாவட்டக் கழக மாநில அமைப்புக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழக— மாநில அமைப்புக் கழகங்களின் அவைத் தலைவர், துணைச் செயலாளர்கள், பொருளாளர் ஆகியோரும், அந்தந்த மாவட்டத்தின் தகுதிபெற்ற ஒன்றிய (சென்னையில் பகுதி) நகர—நகரியக் கழகச் செயலாளர்களும், மற்றும் அந்தந்த மாவட்ட வாரியான மகளிர் அணி—மாணவர் அணி அமைப்பாளர்களும் அந்தந்தத் தகுதியினாலேயே பொதுக் குழு உறுப்பினர்களாக இடம் பெறுவர்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் நியமனம்

கழக சட்ட திட்டம் விதி 19 பிரிவு 5—ன் படியும், அதில் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையை அதிகப்படுத்தி அடுத்துக் கூடும் பொதுக் குழுவில் திருத்தம் செய்வதற்கான அனுமதி பெறும் அடிப்படையில் தி. மு. கழகத் தலைமைச் செயற் குழு உறுப்பினர்களாக கீழ்க் குறிப்பிட்டுள்ள தோழர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

சென்னை மாவட்டம்

ஜி. லட்சுமணன், எம்.பி., முரசொலி மாறன் எம். ஏ., எம். பி., அ. செல்வராசன், எம். எல். ஏ., டி. கே. கபாலி, எம்.எல்.ஏ., திருமதி அமுதாராகவன், டாக்டர் பொற்செல்வி

செங்கற்பட்டு மாவட்டம்

டி. இராசரத்தினம், எம். எல். ஏ., பம்மல் நல்லதம்பி, மீனம்பாக்கம் வைத்தி, கே. டி. எஸ். மணி, டி. கே. பொன்னுவேலு.

வட ஆற்காடு மாவட்டம்

புலவர் கா. கோவிந்தன் எம். ஏ. எம். எல். ஏ., இரா. தருமலிங்கம், ஆம்பூர் இரா. சம்பங்கி ஆரணி ஏ. சி. நரசிம்மன்.

தென் ஆற்காடு மாவட்டம்

என். இராசாங்கம், எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி, பொன். சொக்கலிங்கம்.

திருச்சி மாவட்டம்

எம். எஸ். வெங்கடாசலம் எம். ஏ. பி. எல்., ஜி. பராங்குசம், து. ப. அழகமுத்து, கு. காமாட்சி.

தஞ்சை மாவட்டம்

என். கிட்டப்பா எம். எல். ஏ., நாகூர் அனீபா, நன்னிலம் நடராசன்.

புதுக்கோட்டை மாவட்டம்

காடுவெட்டி அ.தியாகராசன், சி. இராமநாதன், பி. ஏ. பி. எல்.,

சேலம் மாவட்டம்

நாமக்கல் மு. பழனிவேலன், ஏற்காடு ஜெகநாதன், ஜே. கே. கே. சுந்தரம்.

தர்மபுரி மாவட்டம்

எம். கமலநாதன்.

மதுரை மாவட்டம்

பி. மலைச்சாமி, எம். ஏ. பெரியகுளம் கே. எம். எம். மேத்தா, அ. அக்கினிராசு பி. ஏ.

மதுரை மாநகர் மாவட்டம்

பழக்கடை பாண்டி, தாலுது.

கோவை மாவட்டம்

பி. ஏ. சாமிநாதன், எம். எஸ். தேவசகாயம் ஈரோடு சுப்பிரமணியம், பி. ஏ. பி. எல்., எஸ். ஏ. இராசமாணிக்கம், சி. டி. தண்டபாணி.

கிழக்கு முகவை மாவட்டம்

வி. மலைக்கண்ணன், திருமதி தமிழரசி எம். எல். சி., பெரி. அழகு.

மேற்கு முகவை மாவட்டம்

பெ. சீனிவாசன், திருமதி சக்தி கோதண்டம்.

நெல்லை மாவட்டம்

நெல்லை நெடுமாறன், பாளை என். சண்முகம் எம். ஏ. பி. எல்., நெல்லை புகாரி, கணபதி இராம சுப்பையா எம். ஏ., ஏ. எல். சுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்.,

குமரி மாவட்டம்

அ. திரவியம், பி. ஏ., ஜி. எம். ஷா, எம். சங்கரலிங்கம் எம். ஏ. எம். எல். சி.,

கர்நாடக மாநிலம்

கி. சோழன், வே. இளஞ்சேரன்.

ஆந்திர மாநிலம்

சித்தூர் வி. நரசிம்மலு.

புதுவை மாநிலம்

ஜி. பெருமாள்ராஜா, எம். எல். ஏ., காரைக்கால் சிவகுமார்.

இவர்களுடன் தலைமைக் கழகச் செயலாளர்கள், இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர் அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள், மாநில கழக அமைப்பாளர்கள் ஆகியோரும் அந்தந்த தகுதியினாலேயே தலைமைச் செயற்குழு உறுப்பினர்களாக இடம் பெறுவர்.

கழகக் குழுக்கள்

கீழ் குறிப்பிட்டுள்ளபடி தலைமைக் கழகத்தின் ஆட்சி மன்றக் குழு, சொத்துப் பாதுகாப்புக் குழு, தணிக்கைக் குழு ஆகியவற்றில் இடம் பெற்றுள்ள தோழர்கள் அந்தத் தகுதியினாலேயே கழகப் பொதுக் குழு உறுப்பினர்களாகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினர்களாகவும் இடம் பெறுவர்.

ஆட்சி மன்றக் குழு

அன்பில் தர்மலிங்கம், மு. கண்ணப்பன், எஸ். ஆறுமுகம் எம். எல்சி., எஸ். எஸ். தென்னரசு, துரைமுருகன் எம். எல். ஏ., ஆர். டி. சீத்தாபதி.

சொத்துப் பாதுகாப்புக்குழு

மன்னை ப. நாராயணசாமி, பி. டி. ஆர். பழனிவேல்ராசன் பி. எஸ்சி., பி. எல்.

தணிக்கைக் குழு

அ. இரகுமான்கான் எம். எல். ஏ., கோவை மு. இராமநாதன், பரமக்குடி சுப. தங்கவேலன், விருத்தாசலம் எம். செல்வராசு எம். எல். ஏ., க.மு. கதிரவன்.

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை நிர்வாகிகள்

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் நிர்வாகிகள் என்கிற முறையில் கீழ்காணும் தோழர்கள் கழகப் பொதுக்குழு, தலைமைச் செயற்குழு உறுப்பினர்களாக இடம்பெறுவர்.

செ. குப்புசாமி,
காட்டூர் கோபால்,
சி. இரத்தினசபாபதி,

மாநில இலக்கிய அணி

இலக்கிய அணியின் மாநில நிர்வாகிகளான கீழ்காணும் தோழர்கள் கழகப் பொதுக்குழு—தலைமைச் செயற்குழு உறுப்பினர்களாக இடம் பெறுவர்:

கவியரசு முடியரசன், கவியரசு பொன்னிவளவன், புலவர் அறிவுடைநம்பி, திரு.இளமுருகு பொற்செல்வி, கவிஞர் குடியரசு, புலவர் ஆடலரசு, திரு. மு. நாதன்.

க. அன்பழகன்
பொதுச் செயலாளர் தி. மு. க.

அப்பாவி அய்யாசாமி!

தமிழ்நாட்ல இந்தித் திணிப்பே இல்லேன்னு நம்பளோட மத்திய மந்திரி பா. ராமச்சந்திரன் அடிச்சுப்பேசியிருக்காரு...முழுப் பூசனிக்காய சோத்துல அமுக்குறதுன்னு என்னன்னு எனக்கு இப்ப தாங்க புரியுது!...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சாதாரணமானவர்களாக நாங்கள் இருந்த காரணத்தால் பெரியார் அவர்கள் மிக எளிதாகப்புறக்கணித்தார்கள் எங்களுடைய நோக்கம் மற்ற தமிழர்கள் பதவிக்கு வரக் கூடாது என்பதல்ல; ஆனால் தமிழ் இனத்திலே இருப்பவர்கள் பதவி காரணமாக தங்கள் லட்சியத்தை மறந்துவிடக் கூடாது, மொழிப் பற்றை மறந்துவிடக் கூடாது, வைதீக எதிர்ப்பை இழந்துவிடக் கூடாது என்பதுதான் தந்தை பெரியார் அவர்கள் அரசியல் லட்சியத்தோடு ஒரு கட்சியை செயல்படுத்த தொடங்குகிறபோது, இந்தக் கொள்கைகளுக்கெல்லாம் குறை ஏற்பட்டுவிடும் என்று கருதியகாரணத்தால்எங்களைக் கண்டித்தார்கள். அண்ணா அவர்கள், பெரியார் தங்களுடைய கொள்கையின்படி, குறிக்கோளின்படி நம்மைக் கண்டிக்கிறார் என்பதற்காகதான் அவர்களுடைய கண்டனத்தை உண்மையான கண்டனமாகக் கருதவில்லை. ஒரு முறை அறிஞர் அண்ணா அவர்கள் எழுதினார்கள்—"தந்தை பெரியார் அவர்கள் எங்களைக் கண்டிப்பது ஒரு தகப்பன் தன்னுடைய பிள்ளைக்கு போர்ப் பயிற்சி தருவதைப் போல, அல்லது வாள் பயிற்சி தருவதைப்போல நமக்கு பயிற்சி தருவது'' என்று குறிப்பிட்டார்கள். இன்னொரு முறை மிக அழகாகச் சொன்னார்கள், யானை தன்னுடைய குட்டியை அதனுடைய மிக இளம் பருவத்தில் உருட்டியும், தள்ளியும்இன்னும்காலால் இடறியும் தன் குட்டியை எழுந்திருக்க விடாமல் தடுப்பதுமாகிய காரியங்களில் ஈடுபட்டிருப்பது அந்த குட்டிக்கு வலிவு ஏற்படுவதற்காக, நாளைக்கு ஒரு புலியோ அல்லது ஒரு சிங்கமோ எதிர்ப்படுகிறபோது அந்தக் குட்டி தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத்தான் அந்தப் பயிற்சி தருகிறது என்று சொன்னார்கள். அதைப்போல தந்தை பெரியார் அவர்கள் நமக்கு உறுதி ஏற்படுவதற்காகத்தான் இந்தப் பயிற்சி தருகிறார்கள் என்று சொன்னார்கள். பெரியாருடைய அந்த உணர்வையும். இலட்சியத்தையும் நாங்கள் இழக்கமாட்டோம்.

(தொடரும்)

டில்லியில் நான் ஓர் அந்நியன

வி.கே. மாதவன்குட்டி

(3)

1961-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணிப்பின்படி, இந்நாட்டில் இந்திமொழி பேசுவோரின் எண்ணிக்கை 15·3 கோடி மட்டுமே. இது 25 சத விகிதற்திற்கும் குறைவேயாகும். 1971-வாக்கில் இத்தொகை இன்னும் குறைந்துவிட்டிருக்கிறது கணிசமான தொகையினர் உருது மொழியைத் தங்கள் தாய் மொழியாக அறிவித்திருப்பதால் இத்தொகை மேலும் குறைந்திருக்கக்கூடும். எனவேதான், இந்த அதிர்ச்சி தரும் அறிக்கையை வெளியிடுவதற்கு அரசினர் அஞ்சுகின்றனர். இந்தியாவில் இந்தி பேசுவோர் எண்ணிக்கைதான் மேலோங்கியிருக்கிறது என்ற மாயையை உருவாக்கி, அதனை மக்கள் நம்பவேண்டுமென நினைக்கிறார்கள். ஆனால், தீவினைப் பயனாக, இந்தத்தொகை தலைவர்கள் கூறுகின்ற எண்ணிக்கையில் 40 சத விகிதத்தைக் கூட எட்டவில்லை. இப்படி சிறுபான்மையினரில்கூட கணிசமான தொகையினரால் பேசப்படாத ஒருசிறுபான்மை மொழிதான் நாட்டின் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படுகிறது.

ஈராண்டுகளுக்கு முன்பு, கீழ்நிலை அரசு ஊழியங்களுக்கு ஆள் எடுப்பது அடியோடு நிறுத்தப்பட்டது. ஆனால், இந்தி உதவியாளர்கள் என்ற ஒரே ஒரு பிரிவுக்கு மட்டும் ஆள் எடுப்பது நிறுத்தப்படவில்லை. இந்த இந்தி உதவியாளர்கள் அனைவருமே வடநாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். தலைமை அமைச்சர் பதவியில் நாட்டம் கொண்டிருக்கிற ஒரு தலைவர் சில மாதங்களுக்கு முன்பு சென்னைக்கு வந்திருந்தபோது "தென்னிந்தியாவுக்கு நான் வருவது இதுதான் முதல் முறை" என்று கூறினார். இன்றைய தேசியத் தலைவர்கள் எனத் தங்களைக் கூறிக் கொள்கிறவர்களில், தென்னகத்திற்கு வந்து அங்கு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்?

சென்ற ஆண்டில் திருவனந்தபுரத்தில் உலக மலையாள மொழி மாநாடு நடந்தபோது டில்லியிலிருந்து யாரையாவது அம்மாநாட்டிற்கு அழைக்க அமைப்பாளர்கள் முயன்றார்கள். அவர்கள் பரிதாபமாகத் தோல்விகண்டார்கள். ஒருவர் கூட இம்மாநாட்டிற்குச் செல்வதில் அக்கறை காட்டவில்லை. அப்படிப் போகமுடியாத அளவுக்கு இங்குள்ள தலைவர்கள் அனைவரும் அரசுப் பணிகளில் மூழ்கிக்கிடக்கவில்லை. தென்னகத்தைப் பற்றி அவர்கள் கொண்டிருக்கும் மனப்போக்கே இதற்குக் காரணம். ஆனால், இதனால் மலையாள மொழியோ இலக்கியமோ எவ்விதத்திலும் பாதிக்கப்பட்டுவிடவில்லை. என்றாலும், டில்லித்தலைவர்கள் எவரேனும் பங்கு கொண்டிருந்தால், இம்மாநாட்டின் நோக்கும் போக்கும் இன்னும் விரிவடைந்திருக்கும். இத்தகையமனப்பான்மைகள்தான் அவற்றைக் கொண்டிருப்பவர்களைபற்றித்தவறான கருத்தை உண்டாக்குகின்றன.

இன்றைய ஆட்சியாளர்கள் அதிகாரம் என்னும் குறுகிய வட்டத்திற்குள்ளேயே வலம் வந்துகொண்டிருக்கிறார்கள் சாதி அல்லது குழு அல்லது பிராந்தியம் என்ற ஒரு குறுகிய அளவுக்குள்ளேயே அவர்களுடைய நாட்டுணர்வு நின்றுவிடுகிறது. அவர்களுக்கு நாடு என்பது அவர்களின் மாநிலந்தான்; பலருக்கு அவர்களுடைய ஊராட்சிதான்.

தேசியமொழி உள்ளடங்கலாக வேறு எந்த மொழியினையும் புரிந்து கொள்வது அவர்களுக்குக் கடினமாக இருக்கிறது. ஒருமைப்பாடு ஒற்றுமை தேசிய உணர்வு என்பதெல்லாம் அவர்களுக்குப் புரியாத புதிர். மேடைகளில் பேசுவதற்கும், அதிகாரத்தில் நீடிப்பதற்கும் பயன்படுத்தப்படும்அலங்காரச் சொற்கள்தான் இவை என அவர்கள் கருதுகிறார்கள்.

நாட்டில் அந்நியச் செலாவணி பெருகியிருக்கிறது. பல கோடித் தென்னவர்கள். அயல் நாடுகளில் நெற்றிவியர்வை நிலத்தில் விழ அரும்பாடுபட்டுச் சர்பாதித்து அனுப்பும் பணம், இந்த அந்நியச் செலாவணியில் கணிசமான பகுதியாகும். மூலப்பொருள்களைப் பொறுத்துங்கூட, குடியேற்ற ஆதிக்க மனப்பான்மையையே வடவர் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். மிக அண்மைக் கால உதாரணம் ஒன்றைச் சொல்கிறேன். இந்நாட்டில் ரப்பர்உற்பத்தி பெரும்பாலும் கேரளத்திலேயே நடைபெறுகிறது, ஏராளமான மக்கள் தங்கள் வாழ்க்கைக்கு இத்தொழிலையே நம்பியிருக்கிறார்கள். அண்மையில் இத்தொழிலில் மந்தம் ஏற்பட்டபோது ரப்பரை ஓரளவு ஏற்றுமதி செய்வதற்கு உதவிபுரியும்படியும், அல்லது சந்தை நிலவரம் சீரடையும் வரையில், அரசாங்கம் ரப்பரை வாங்கிக்கையிருப்பில் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் மத்திய அரசிடம் கேட்டுக்கொள்வதற்கென இத்தொழிலில் ஈடுபாடு கொண்டவர்கள் டில்லிக்கு வந்தார்கள். நெடுங்காலம் வரை ஏதும்நடைபெறவில்லை. இறுதியாக மத்திய அரசு சந்தையில் இறக்கியது. ஆனால், கணிசமான பலன் ஏதும் விளையவில்லை. விலைகள் சற்று உயர்ந்தன.

ஆனால், அண்மையில்மழைக்காலத்தின்போது ரப்பர் எடுப்பது நிறுத்தி வைக்கப்பட்ட பொழுது விலைகள் ஏறுமுகமாகின. அப்போது, உள்நாட்டில் ரப்பரின் விலை ஏறுவதைத் தடுப்பதற்காக அயல் நாட்டு ரப்பரை இறக்குமதி செய்வதென மத்திய அரசு அவசர அவசரமாக முடிவெடுத்தது. இந்த விநோதமான நடவடிக்கையை மத்திய அரசு ஏன் எடுத்தது? ரப்பர் உற்பத்தியாளர்களில் பெரும்பான்மையினராக உள்ள தென்னாட்டவரின் நலன் கருதியா? அல்லது ரப்பர் பொருள் உற்பத்தியாளர்களில் பெரும்பான்மையினராக உள்ளவடநாட்டவர் நலன் கருதியா என்பதுபுரியவில்லை. தென்னாட்டில் உற்பத்தியாகும் மற்ற கச்சாப் பொருள்களைப் பொறுத்தும் மத்திய அரசினர் போக்கு இதே நிலைதான்.

இங்கு, தென்னாட்டில் தோன்றி, தேசியத் தலைவராக உயர்ந்து, உலக அறிஞராகப் புகழ்பெற்ற ஒருவர் (கிருஷ்ண மேனன்) என் நினைவுக்கு வருகிறார். அவருக்குப் பின் வந்தவர்களில் எவரும், அவர்சாதிக்காததில் எதனையும் சாதித்துவிடவில்லை. சீனாவுடனான நம்முடைய உறவுகளை, நடுநிலையில் நின்று ஆராய்ந்து பார்க்கும்பொழுது, அவர் சொன்னது, நடந்துகொண்டது முற்றிலும் சரி என்ற நம்பிக்கை எனக்கு வலுப்பெற்றிருக்கிறது "ஆயத்தமாக இல்லை" என்ற சாக்கில் அவர் தண்டிக்கப்பட்டாரென்றால், அதற்கு மூன்றாண்டுகளுக்குப் பிறகு கட்சுப் பகுதியில் நமதுபாதுகாப்பைக் கோட்டைவிடும் அளவுக்கு ஆயத்தமின்றி இருந்தவர்களை எப்படி தேசபக்தர்கள் என்று கருத முடியும்? அறிவிலும் ஆற்றலிலும் கோபுரமாக உயர்ந்து நின்ற அந்தத் தென்னகத் தலைவர் மட்டும்தொடர்ந்து அதிகாரத்தில் நீடித்திருந்தால், நாட்டு நிகழ்ச்சிகளின் போக்கே வேறு விதமாக மாறியிருக்கும்.

அவரை ஒழித்துக்கட்டுவதற்கு ஒருவகை இனவெறிப்போக்குடன் எதிர்ப்புணர்ச்சி வளர்க்கப்பட்டது.

எனது தொழில்முறையில் எனக்கு ஏற்பட்ட இந்த உணர்வுகளை என்னுடைய மூத்த பத்திரிகையாளர் நண்பரிடம் தெரிவித்தபோது அவர், "அப்படியிருந்தும்டில்லியிலும், வடநாட்டிலும் நிகழ்கிற நிகழ்ச்சிகள் பற்றி இன்னும் செய்தி அனுப்பிக்கொண்கிருக்கிறாயே" என்றார். அவர் சொன்னதை ஒப்புக்கொண்டேன். எனினும், வேல்ஸ் இளவரசரின் வருகை பற்றி அவர் செய்தி அனுப்பினதை அவருக்குச் சுட்டிக்காட்டினேய. இளவரசர் எப்படி கண் சிமிட்டினார், அவருடைய கிரீடம் எப்படி இருந்தது என்றெல்லாம் எழுதி அவர் வார்த்தைகளை வீணாக்கியிருக்கிறார் (அதற்காகத்தானே நமக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது) அதேபோல்தான் இன்னும் எல்லாக்காரியங்களும் நடக்கின்றன; நானும் எனது கடமையைச் செய்கிறேன்

நாட்டின் அரசியலில் எத்தகைய பங்கினை ஆற்றுவதற்கு நாம் அனுமதிக்கப்படுகிறோம் என்ற வினாவை எழுப்ப நமக்கு உரிமை உண்டு. எங்களை அடியோடு புறக்கணித்துவிட்டு நீங்கள் இந்நாட்டை ஆண்டு விட முடியாது. ஏனென்றால், அவ்விதம் புறக்கணிக்க முயல்வது, தேசிய இயக்கத்தின் நீதியையே மீறுவதாகும்.

எனது அடையாளத்தை நிலைநாட்டிக் கொள்ள நான் விரும்புகிறேன். எனது மக்களை, நிலப்பரப்பை, மொழியை, பண்பாட்டை, நினைவுகளை நேசிக்கின்றேன். இதனைக் குறுகிய மனப்பான்மை என்று இகழ்கின்றார்கள். எனது வடநாட்டுச் சகோதரரிடம் ஒன்று கேட்கின்றேன்: "இதே உணர்வு உங்களிடமிருந்தால் அதற்குப் பெயர் தேசபக்தி — எங்களிடமிருந்தால் அது குறுகிய மனப்பான்மையா?" அவர்களின் விசித்திரவாதம் எனக்குப் புதிராக இருக்கிறது.

தலைநகரில் 25 ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறேன். இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும்இங்கு நான் ஓர் அந்நியன் என்ற உணர்வே ஏற்பட்டுள்ளது. ஆம்! இங்கு நான் ஓர் அந்நியன்; பயணச் சீட்டும் (பாஸ்போர்ட்) நுழைவுச் சீட்டும் (விசா) இல்லாத ஓர் அந்நியன்! இத்தகைய எண்ணம் எனக்குத் தோன்றியிருக்கிறதென்றால் அதற்கு முழுப்பொறுப்பு ஆட்சியாளர்களேயாவர்.

இன்றும், நான் ஓர் இந்தியன் என அழைக்கப்படுவதையே விரும்புகிறேன். இதற்காக எனது குழந்தைகள் என்னைக் எதிர்காலத்தில் குற்றவாளி எனக் கூறிவிட்டுப் போகட்டுமே!

(நன்றி: 'தி இல்லஸ்ட்ரேட்டடு வீக்லி ஆஃப் இந்தியா' 24-9-78)

பிரதமர் மகனின் சட்டத்திற்கு எதிரான செயல்!

பிரதமரின் மகன் காந்திபாய் தேசாய் 90 லட்சம் ரூபாய் வசூலித்தார் என்றும், அதற்கு சரியான கணக்கில்லை என்றும் ஜனதாவின் பொதுச் செயலாளராகஇருந்த மதுலிமாயி அதிர்ச்சி தரும் செய்தியை வெளியிட்டார். ஜனதாவில் இதனால் பெரும்பூகம்பமே வெடித்தது. பிரதமர் சிக்கலில்மாட்டிக்கொண்டார் தன்னைகாப்பாற்றிக்கொளள ஜனதா கட்சிப் பொருளாளர் சி. பி. குப்தாதான் தான் காந்திபாய் தேசாய் நிதி வசூல் செய்ய அனுமதித்ததாகக் கூறினார்; வசூலிக்கப்பட்ட பணத்திற்கு அவசர அவசரமாகப் பொய்க் கணக்குகள் தயாரிக்கப்படுவதாகச் செய்திகள் வெளியாயின;

இது சம்பந்தமாக 'ஆன்லுக்கர்' எனும் ஆங்கிலப் பத்திரிகை நிருபருக்கு ஜனதா கட்சித் தலைவர் சந்திர சேகர் பேட்டி அளித்திருக்கிறார். அந்தப் பேட்டியில் சந்திர சேகர் அப்பட்டமாகச் சில உண்மைகளை ஒப்புக்கொண்டிருக்கிறார். வசூலிக்கப்பட்ட பணமெல்லாம் கறுப்புப் பணம் இல்லை என்றாலும் அவை எல்லாம் சட்டத்திற்கு எதிரானவையே என்று ஒப்புக்கொண்டிருக்கிறார். அந்தப் பேட்டியின் ஒரு பகுதி கீழே தரப்படுகின்றது.

நிருபர் .— பிரதமர் வீட்டிலிருந்து அவர்மகன் காந்திபாய் தேசாய் நிதி திரட்டியதில் தவறில்லை என்றால் கடந்த காலத்தில் அதே இடத்திலிருந்து சஞ்சய் நிதி திரட்டியதும் தவறென்று நீங்கள் நீங்கள் கருத முடியாதல்லவா?

சந்திர சேகர் :— நான் சஞ்சய் நிதி திரட்டியதைத் தவறென்று கூறவில்லை; லைசென்ஸ்போன்ற பல அரசுச் சலுகைகள் அளிப்பதாக உறுதி கூறி நிறி திரட்டுவதுதான் தவறு'

நிருபர் :— காந்திபாய் தேசாய் அதே வழியில் நிதி திரட்டவில்லை என்று எப்படி அவ்வளவு நிச்சயமாக நீங்கள் கருத முடியும்?

சந்திர சேகர் :— நான் அப்படிப்பட்ட புகார் எதையும் கேள்விப்படவில்லை.

நிருபர் :— நான் உங்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்கிறேன். கடந்த ஓராண்டில் அவசர காலச் சட்டம் அமலில் இருந்தபோது பெரும் பணக்காரர்கள் மீதான வருமான வரி வழக்குகள் கைவிடப்பட்டதை விட அதிக வழக்குகள் ஜனதா அரசில் கைவிடப்பட்டுள்ளன. பெரும் வணிகர்கள் அன்பினால்தான் காந்திபாய் தேசாய்க்குப்பணம் கொடுத்தார்கள் என்று நீங்கள் நினைக்க முடியாது?"

சந்திர சேகர் :— "லைசென்சுகள் வழங்குவதாக உறுதி அளித்து காந்திபாய் தேசாய் நன்கொடை திரட்டியிருந்தால் நான் அதுபற்றிக் கவனிக்கிறேன்."

பாட்டு ஒன்று-பாடகர் இருவர்!

ஜனதா கட்சி என்றால் மக்களுடைய கட்சி என்றும் ஜனதா அரசென்றால் மக்களுடைய அரசென்றும் பொருள். ஜனதா இந்திராவின் சர்வாதிகாரப் பிடியிலிருந்து இந்திய ஜனநாயகத்தைக் காப்பாற்றிய பெரும் பணியில் தனியுரிமை கொண்டாடுகிறது. இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தின் மூலம் இந்தியசுதந்திரத்தினைக் காப்பாற்றிய பெருந்தொண்டில் முழு உரிமை கோருகிறது. அந்தப் புனிதப் போரில் தியாகம் செய்த பிறருடைய பங்கை மறுத்து அந்தப் பெருமையில் தனி உரிமையும் முழு உரிமையும் கொண்டாடுகிறது அனைத்திற்கும் தனிச் சொந்தம் கொண்டாடுகிறது.

இவ்வளவு பெருமையோடும் பொது மக்களின் பெரும் ஒத்துழைப்போடும் ஆட்சிக்கு வந்த ஜனதா அரசு இன்று வரை குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய எந்த ஒரு சாதனையையும் செய்யவில்லை. மக்களின் ஆசை நிராசையாகி விட்டது. எதிர் பார்ப்பு ஏமாற்றத்தில் முடிந்து விட்டது. நம்பிக்கை நசித்துவிட்டது. ஜனதா அரசு செக்கு மாடுபோல பழைய வட்டத்தையே சுற்றிச் சுற்றி வருகிறதே தவிர முன்னேக்கி ஒரு அடிகூட இன்னும் எடுத்து வைக்கவில்லை. இருபுறம் பூட்டப்பட்ட குதிரைகள் எதிர் எதிர்ப்புறம் இழுத்துக்கொண்டிருக்க வண்டி பூட்டிய இடத்திலேயே நிலைத்து நிற்பதைப் போல் ஜனதா அரசு தொடங்கிய இடத்திலேயே முளை அடித்துக் கட்டியதுபோல நின்றுகொண்டிருக்கிறது. நாள் தோறும் கோஷ்டிப் பூசல், குடுமி பிடிச்சண்டை இதுதான் ஜனதாவின் சிந்தனை, செயல், சாதனை எல்லாம்.

ஆனல். அதே நேரத்தில் பிரதமர் தேசாயோ ஜனதாவிற்கு மக்கள் ஆதரவு பெருகி வருவதாகவும் உட்கட்சிப் போராட்டம் அருகி வருவதாகவும் சுருதி குன்றமல் நாள் தோறும் பாடி வருகிறர். மொரார்ஜி பிரதமராவதற்கு முன் பிடிவாதத்திற்குப் பெயர் போனவர். ஆனல் இடையில் ஏற்பட்ட படிப்பினைகள் அவரைப் பதப்படுத்தியிருக்கும் ... பக்குவப் படுத்தியிருக்கும் என்று நாடு நம்பியது. ஆனல் அவரிடமோ ஒரு துளி மாற்றமும் ஏற்படாதது அறிந்து ஏமாற்றம் அடைந்திருக்கிறது

கடந்த ஜூலை 11-ஆம் தேதி நடைபெற்ற ஜனதா தேசிய நிர்வாகக் குழுக் கூட்டத்தில் வாஜ்பாயி சமாதானக் குரலில் சமரசத் தொனியில் பேசிக்கொண்டிருந்தார். "குற்றம்பார்க்கில்

★★★★★★★★★★

எல். கணேசன்

★★★★★★★★★★

சுற்றம் இல்லை. குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொள்ள வேண்டும்'' என்று உறிக்கொண்டிருந்தார். மொரார்ஜி கொதித்தெழுந்து குறுக்கிட்டு உரக்கக் கூறினர்.'' நான் தவறே இழைக்கவில்லை. நான் செய்ததாக ஒரு தவறையாவது எடுத்துக் காட்ட முடியுமா? என்று கோபாவேசமாகக் கேட்டார் இதே தோரணையில். இதே தொனியில் இருண்ட காலத்தில் நாடாளுமன்றத்தில் இந்திரா கேட்டார், "நான் கூறியதெல்லாம் நடந்திருக்கிறது. நான் ஒரே ஒரு தவறு செய்திருப்பதாகக் கூட சுட்டிக் காட்ட முடியுமா'' என்று.

இந்திராகாந்தி அவசர நிலைப் பிரகடனம் அமுலில் இருந்தபோது 'என்னைத் தாக்கக் கருதுபவர்கள் என்னை நேரடியாகத் தாக்க முடியாமல் என் மகன் சஞ்சயைத் தாக்குகிறர்கள்'' என்று அடித்துப்பேசினர். மொரார்ஜியோ ஜனதா ஆட்சியின் முற்பகுதியிலேயே அழுத்தந்திருத்தமாக அதே கருத்தைக் கூறுகிறர், ஹுக்கும் தேவ் நாராயண் யாதவ் எனும் ஜனதா கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எழுப்பிய குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பு எழுதிய பிரதமர் மொரார்ஜி தன் மகன் பற்றிய குற்றச் சாட்டிற்குக் கீழ்க்கண்டவாறு பதில் எழுதியுள்ளார்:—

"ஒன்று தெளிவாகத் தெரிகிறது. என்னை நேரடியாகத் தாக்க முடியாதபோதெல்லாம் என் மகன் மீது புகார் எழுப்புவதன் மூலம் என்னை மறைமுகமாகத் தாக்குவதற்குப் பல ஆண்டுகளாக முயற்சிகள் நடக்கின்றன.''

இந்நாள் பிரதமர் மொரார்ஜி திடீர் என்று கட்சிக் கட்டுப்பாட்டை வற்புறுத்துவதும் முன்னள் பிரதமர் இந்திராகாந்தியின் பாணிதான், பிரதமர் தேசாயின் பார்வையும் 'பாவமும்' இந்திராகாந்தியின் பார்வையையும் 'பாவத்தையும்' ஒத்திருப்பதை 'சண்டே' ஆங்கில இதழில் ஷமீம் அகமது ஷமீம் விளக்கிக் காட்டி விட்டு ஒன்றைக் குறிப்பிடுகிறர்.

"குணத்திலும், நடவடிக்கையிலும் இந்திராவுக்கும் மொரார்ஜி தேசாய்க்கும் இருக்கும் ஒருமித்த தன்மையைப்படம் பிடித்துகாட்டுகிறேன்...''

இதனினும் வேதனை மிக்க ஒன்று—அண்மையில் ஜனதா கட்சி நாடாளு மன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அதைப்பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் பலப்பல வகைகளில் வெளியிடப்பட்டன. 'மொரார்ஜியின் கை ஓங்குகிறது' 'மொரார்ஜியின் உறுதி' காரசாரமான விவாதம் "சரண்சிங் மவுனம்'' "ராஜ் நாராயணன் அடக்கம்'' என்றெல்லாம் தலைப்பிட்டுச்செய்திகள் வெளியிடப்பட்டன செய்திகளைப் பார்க்கும்போது ஜனதா கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரு அணியாகப் பிரிந்து பிரச்சனைகளை எழுப்பியிருக்கிறர்கள். பாரதிய லோக்தளத்தினர், சோஷலிஸ்ட் கட்சியினர் ஒரு அணியாக சரண்சிங் ஆதரவாளர்களாக இருந்திருக்கின்றனர். அவர்கள் மொரார்ஜி தலைமையிலான ஜனதா அரசின் திறனற்ற போக்கை கடுமையாகத்தாக்கியுள்ளனர்.

மொரார்ஜி மகன் காந்தி பாய் தேசாய் மீது ஊழல் குற்றச் சாட்டை எழுப்பி இருக்கின்றனர். விசாரணைக் கமிஷன் கோரியுள்ளனர். பழைய காங்கிரஸ், ஜனநாயகக் காங்கிரஸ், ஜன சங்கம் ஆகிய கட்சிகளின் பெரும்பான்மையினர் பிரதமரை ஆதரித்துள்ளனர். கட்சிக் கட்டுப்பாட்டை வற்புறுத்தி மீறுகிறவர்கள் மீது – குறிப்பாக ராஜ் நாராயணன் – மீது— கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளனர். விவாதம் என்பதைவிட குழாயடிச் சண்டையே நடந்திருக்கிறது. சரண்சிங் ஆதரவாளர் ஒருவர் பேசும்போது, ஜனதா அரசு தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற விட்டால் மக்கள் செருப்டகளைத்தான் வீசுவார்கள்' என்று குறிப்பிட, பிரதமரின் ஆதரவாளர் ஒருவர் எழுந்து குறுக்கிட்டு 'விவாதத்தின் தரத்தைத் தாழ்த்தாதே' என்று கூச்சலிட்டு கரத்தில் செருப்பை எடுத்து உயர்த்திக் காட்டி விவாதத்தின் தரத்தை உயர்த்தி உள்ளார்.

பிரதமர் தம்மீதும் தம் அரசின் மீதும் கூறப்பட்ட குற்றச் சாட்டுகளுக்கு மறுப்புரைத்திருக்கிறர். பல பத்திரிகைகள் அவருடைய உறுதியைப் பாராட்டி நற்சான்று வழங்கிதுள்ளன.

அமைச்சர்கள் தங்கள். தங்களின் பிள்ளைகள், மருமக்கள் சொத்துக் கணக்கை வைக்க வேண்டும் என்று பலர் வற்புறுத்தியிருக்கின்றனர். இந்தக் கோரிக்கைக்கு விடையளித்த

(4-ம் பக்கம் பார்க்க)

கலைஞர் கடிதம்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்களைத் திட்டமிட்டுத் தாக்கியவர்கள் யார் என்பது குறித்துக் காவல்துறையினரிடம் பழக்கடை பாண்டி புகார் கொடுத்துள்ளார். இறந்துவிட்ட இளஞ்செழியனின் உடல் திருவில்லிபுத்தூர் மருத்துவ மனையில் இருக்கிறது. மற்றவர்கள் மதுரை மருத்துவ மனைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறர்கள்.

ஒரு ஏழைத் தொழிலாளி வீட்டுப் பிள்ளை இளஞ்செழியன்! ஏழாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தான். மேடையிலேறினல் கடல்மடை திறந்தாற் போல் சொற்பொழிவாற்றும் திறனை இந்தச் சிறுபிராயத்திலேயே பெற்றிருந்தான். எதிர்காலத்தில் கழகத்திற்கு மிகவும் பயன்படுவான் என்று மனக்கோட்டை கட்டியிருந்தேன். அவனும்கூட அன்றைக்குக் கூட்டங்களில் பேசிவிட்டு இரவு வீடு திரும்பி, தான் பேசியவற்றைத் தாய் தந்தையரிடம் கூறி மகிழலாம் என்று எண்ணிக் கொண்டுதான் காரில் வந்திருப்பான். அதற்குள் இரத்தவெறி கொண்டவர்களின் வன்முறைப் பசிக்கு இரையாகிவிட்டான்.

சட்டத்தைக் கையிலே எடுத்துக் கொண்டு இடுகாட்டுக் கூத்து நடத்துகிறவர்களால் இன்னும் எத்தனை பேருடைய உயிர்கள் குறிவைக்கப்பட்டிருக்கின்றனவோ?

எதற்கும் தயாராகத்தான் நமது இலட்சியப் பயணம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது! இந்தப் பயணத்தில் பலியானவர்களின் பட்டியல் மிக நீளமானது! அந்தப் பட்டியல் கண்டு நமது பயணம் நின்றுவிடவில்லை!

இதோ அந்த வீரர்களின் பட்டியலில் இளஞ்செழியனின் பெயரும் இணைகிறது! அவனது இரத்தத்தால் திலகமிட்டுக் கொண்டு—அவன் புதைக்கப்படும் இடம் நோக்கித் தொழுதவாறு நமது பணிகளைத் தொடருவோம்!

அந்த இளம் வீரனைச் சுமந்து பெற்ற அந்தத் தாயின் கண்ணீரையும், அவனது எதிர்காலம் பற்றிக் கனவு கண்டுகொண்டிருந்த தந்தையின் கண்ணீரையும் துடைப்பதற்கான வலிமை நமக்குக் கிடையாது எனினும் அந்தக் குடும்பத்திற்கு உற்ற துணையாக நாமிருப்போம்! வாழ்க இளஞ்செழியன்!

அன்புள்ள,

மு. க.

நன்றி: 'முரசொலி' (10-10-78)

முப்பெரும் தத்துவ மோதிரங்கள்!

மேற்படி மோதிரங்கள் பஞ்சலோகத்தால் தயாரித்து 22 காரட் கோல்டு பிளேட்டிங் செய்யப்பட்டது. பல் ஆண்டுகள் உழைக்கக் கூடிய ஒரு மோதிரம் விலை ரூ. 15. தபால் செலவு தனி. உங்களுக்கு தேவையான மோதிரத்தைக் குறிப்பிட்டு உங்கள் விரல் அளவை நூலில் எடுத்து, ரூ. 3 அட்வான்சுடன் அனுப்பினல். மீதி தொகைக்கு நீங்கள் விரும்பும் மோதிரத்தை V. P. P மூலம் அனுப்பிவைக்கிறோம்.

தயாரிப்பாளர்: சக்தி. ஜி சம்பந்தன்
42, பள்ளிக்கூடத் தெரு. (சத்திரம் பிளாட்)
பட்டாபிராம்-சென்னை-600 072.

"போட்டோ வீனஸ்" 104, C.N.K. ரோட், சென்னை-600 005.
PHOTOGRAPHERS

M.K. TRADERS MADRAS-600024

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணை முறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்

H. O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW R OM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ணு மடம்சாலை, சென்னை-28
திறமையுள்ள ஆண் – பெண் கேன்வாசர்கள் தேவை.

கன்னியாகுமரிக்கு ஏற்பட்ட நிலை-

காஷ்மீருக்கு ஏற்பட வேண்டுமா?



மிர்சா முகம்மது அப்துல் பெக் அரசியலில் அடிபட்ட ஒரு பறவை, என்ற போதும் மீண்டும் பறக்க முயலுகிறது

இப்போது அரசியல் அரங்கில் அதிகம் பேசப்படும் மனிதராக, செய்தித்தாள்களில் அதிகம் இடம் பெறும் அரசியல் வாதியாக அப்சல் பெக் விளங்கி வருகிருர்.

'காஷமிரத்தில் அண்மைக் காலம் வரை துணைமுதலமைச்சராக அமர்ந்திருந்த இவர் சேக் அப்துல்லாவின் அரவணைப்பில் அரசியல் நடத்தியவர்!

ஜம்மு காஷ்மீரின் வழிகாட்டி, ஒரே தலைவர் சேக் அப்துல்லா'' என்று நேற்று வரை துதிபாடிக் கொண்டிருந்தவர் அப்சல் பெக்.

அரசியல் கருத்து வேறுபாடு சேக் அப்துல்லாவுக்கும் அப்சல் பெக்குக்கும் இடையே ஏற்பட்டு இறுதியில் துணை முதலமைச்சர் பொறுப்பிலிருந்தே அப்சல் பெக் விடுவிக்கப்பட்டு விட்டார், இது ஆளும் கட்சியான தேசிய மாநாடு எடுத்த முடிவு என்று கூறப்படுகிறது: அது மட்டுமல்ல அந்தக் கட்சியிலிருந்தும் அப்சல் பெக் நீக்கப்படுகிருர்.

தன்னுடைய எதிர்கால அரசியல் வாழ்வு பற்றி எண்ணிய அவர், தான் சார்ந்த நகரமான ஆனந்தநாக் பொதுக் கூட்டத்தில்,

''நான் துணை முதல்வர் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்படுவதும் ஆளும் கட்சியான தேசிய மாநாட்டில் இருந்து நீக்கப்படுவதும் ஜனநாயகத்தை கொலை செய்யும் நடவடிக்கையாகும்.

இது உள்கட்சிப் பிரச்சினையில்லை. ஜம்மு காஷமீரில் வாழுகின்ற ஐம்பது லட்சம் மக்களின் பிரச்சினை நான் ஒரு புதுக்கட்சியைத் தொடங்குகிறேன். சேக் அப்துல்லாவின் தலைமுறை ஆட்சியைத் தகர்க்கப்போகிறேன். மக்களின் ஜனநாயக உரிமையைப் பறிப்பதைத் தடுக்கப் போகிறேன்.

1975—ஆம் ஆண்டு உடன்பாட்டுப்படி சேக் அப்துல்லா அதிகாரத்தில் நிலை பெற்ருர். அந்த உடன்பாட்டினை எனது புதிய கட்சி வரவேற்கும். புதிய கட்சியின் கொள்கையும், நடைமுறையும் தேசிய மாநாட்டுக் கட்சியை ஒத்திருக்கும்'' என்று பேசியுள்ளார்.

நடந்துவிட்ட இந்த சம்பவத்திற்குக் காரணம் யார்? தவறு செய்தவர் சேக் அப்துல்லாவா? அப்சல் பெக்கா? அதை ஆய்வு செய்ய நாம் விரும்பவில்லை. அந்த இடத்திற்கு நாம் போகத் தயாராகவும் இல்லை.

அப்சல்பெக், காஷ்மீர் விவகாரத்தில் தலையிடும்படி மத்திய அரசை அழைப்பதுதான் விசித்திரமாக உள்ளது.

சா. கணேசன்

பதவியிலிருந்தும், கட்சியிலிருந்தும் நீக்கப்பட்ட பெக், தான் நீக்கப்பட்டதற்கான காரணங்களைக் கூறும்படி சேக் அப்துல்லாவை நோக்கி விரல் நீட்டினுல் அதை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

தான் பலிவாங்கப்பட்டது நீதியா? நேர்மையா? எனக் கேட்டு தன் தரப்புவாதங்களை காஷ்மீர் மக்கள் முன் எடுத்து வைத்து, அவர்தம் ஆதரவைப் பெற்ருல் அவரைநாம் பாராட்டலாம்.

ஆனால் —
பாலாடைக் கட்டியைப் பங்கு போட்டுத் தருமாறு குரங்கை அழைத்த ஒரு பூனையாக பெக் நடந்து கொள்கிருர்.

மாநில அரசு விவகாரங்களில் குறுக்கிட்டு தனது ஆக்ரமிப்பை நிலை நாட்ட தருணத்தை எதிர் பார்த்து ஒரு ஓநாய் போல் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டிருக்கும் மத்திய அரசை 'வா, வா' என்று அப்சல்பெக் அழைப்பது ஒரு புத்திசாலித்தனமான காரியமல்ல.

'எந்த மாநிலத்திலாவது ஜனநாயகத்திற்கு ஆபத்து நேர்ந்தால் மந்திய அரசு தலையிடும்'' என்று அண்மையில் காஷ்மீர் மாநிலத்தில் தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய் பேசியதை அப்சல் பெக் சுட்டி காட்டுகிருர்.

'மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள்'— தேர்தலுக்கு முன்னலே தேசாயின் முழக்கம் இது. தனது கட்சி ஆட்சி செய்யாத மாநிலத்தில் தலையிடுவதற்கான சமயம்பார்த்துக் கொண்டிருக்கும் அரசியல் வாதி மொரார்ஜி என்ன செய்யமாட்டார்!

கட்சியிலேயே நீதிக்குப் போராட வேண்டியவர் மொரார்ஜியைத் தலையிட வேண்டினால் பெற்ற உரிமைகளை இழக்க நேராதா? மாநில சுயாட்சிக்கு மாருன செயலாகாதா? இருக்கும் அதிகாரங்களை மத்திய அரசுக்கு சரணடையச் செய்யும் போக்கல்லவா இது?

இதையெல்லாம் அப்சல் பெக் அலசிப் பார்த்தாரா?

தனது தவருனபாதையால் கலைஞர் ஆட்சியைக் காட்டிக் கொடுத்த நடிகரைப் போல் துரோகிகள் பட்டியல் தொடரக்கூடாது என்று நியாய உள்ளம் படைத்தவர்கள் நாட்டின் நலத்தை எண்ணுபவர்கள் நினைக்கத் தான் செய்வார்கள்.

தன்னைவிட நாடு பெரிது என்று எண்ணிச் செயல்படுவோன் ஆட்சியைக் கவிழ்க்கச் சூழ்ச்சி செய்யமாட்டான். அப்படிசெய்துவிட்டகோமாளி கோட்டையிலே நீண்டகாலம் கோலோச்சவும் முடியாது.

கன்னித்தமிழகத்திற்குஏற்பட்ட நிலை காஷ்மீரத்திற்கு ஏற்பட வேண்டுமா?

எங்கள் சென்னை நகர் பிரதிநிதி
கே. எம். ஜி. மாதவன்
11, புதுத்தெரு. மைலாப்பூர்
சென்னை – 4.

நம் நாடு
ஆசிரியர்: மு.கருணாநிதி

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு.கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயணசெட்டிதெரு, இராயபுரம், 600013) அச்சிட்டுவெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம், 'அன்பகம்' 508 அண்ணாசாலை, தேனும்பேட்டை சென்னை-600018 தொலைபேசி: 441009